# பொருளதிகாரம்
# முதல் 4 இயல்கள்
18kp3T09

# தொல்காப்பியம் – பொருளதிகாரம்
# அகத்திணையியல்

உலக மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கென வகுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை **அறம், பொருள், இன்பம், வீடு** என்பனவாகும். இந்நான்கனுள் இல்வுாழ்க்கைக்கு அடிப்படையாய் இருப்பதோடு இம்மை பயப்பதாயும் விளங்குவது **இன்பம்**. இவ்வின்பமே **அகத்திணை** எனத் தமிழறிஞர்களால் கொண்டாடப்படுகிறது. இது காதல் (**களவு**), இல்லறம் (**கற்பு**) என்னும் இருவகை ஒழுக்கங்களைக் கொண்டது. இவ்விரண்டற்கும் உரிய பொதுச்செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்ற காரணத்தால் இவ்வியல் **அகத்திணையியல்** எனப் பெயர் பெற்றது. 58 நூற்பாக்களில் அமைந்த இவ்வியல் கூறும் செய்திகள்,

1. எழுவகைத் திணைகள்
2. முதல், கரு, உரிப்பொருள்கள்
3. பிரிவுகளின் வகைகள்
4. உடன்போக்கில் நிகழும் கூற்றுகள்
5. உள்ளுறை உவமம்
6. கைக்கிளை, பெருந்திணை
7. பிற அகமரபுகள்

என்னும் தலைப்பில் பாகுபடுத்தும்படி அமைந்துள்ளன.

### அகப்பொருளுக்குரிய திணைகள் (7)

1. **கைக்கிளை[1] முதலாப் பெருந்திணை[7] இறுவாய்**
   **முற்படக் கிளந்த எழுதிணை என்ப.**

**(இ-ள்)** கைக்கிளைப் பொருண்மையை முதலாவதாகவும் பெருந் திணையை இறுதியாகவும் கொண்டவை ஏழ் திணைகளாகும். முதலில் வரையறுத்துக் காட்டப்பெறும் இவற்றை அகப்பொருளுக்குரிய திணைகளாக முன்னோர் கூறுவர்.

**விளக்கம் :** **1.கைக்கிளை 2.முல்லை 3.குறிஞ்சி 4.பாலை 5.மருதம் 6.நெய்தல் 7.பெருந்திணை** என்பன ஏழ் திணைகள். முதலில் கூறப்பட்ட இவற்றைப் போல இனிப் பிற்கூறப்போகும் புறத்திணைகளும் ஏழாகும். அவை **1.வெட்சி 2.வஞ்சி 3.உழிஞை 4.தும்பை 5.வாகை 6.காஞ்சி 7.பாடாண்** என்பன. இவற்றைப் பற்றிய செய்திகள் அடுத்து இடம்பெறும் புறத்திணையியலில் விரிவாகக் கூறப்படும்.

Scanned with CamScanner

**என்று இருவகைப் பட்ட பிள்ளை நிலை:** மேற்கூறப்பட்ட வருதார் தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல் ஆகிய இரண்டும் பின்விளைவிற்குக் கவலைப்படாமல் கரந்தை மறவர் அஞ்சாது வெளிப்படுத்தும் மறமாண்புகளாகும்.

15. வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க நாடவற்கு அருளிய **பிள்ளையாட்டு:** வெட்சி மறவரை வாள் வலிமையால் வீழ்த்தி வெற்றி பெற்றுத் தானும் இறந்துபடுகிறான் கரந்தை மறவன். அம்மறவனின் செயலுக்கு மகிழ்ந்து பறையொலி முழக்கி அவன் உயிர்க்குத் துறக்க (சொர்க்க) மாகிய மேல்உலகத்தை ஆட்சி செய்வதற்குப் பரிசாகத் தருவது பிள்ளையாட்டு ஆகும். **(எ-டு)**

> மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
> கூட்டிய எஃகம் குடர்மாலை - சூட்டியபின்
> மா(று)இரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
> வேல்திரிய விம்மும் துடி. (பு.வெ.மாலை. கரந்தை. 8)

**அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்:** இவ்வாறு கூறப்பட்ட ஆநிரை மீட்டலாகிய பதினைந்து நிலைகளிலும் கரந்தைப் பூவைச் சூடிப் போர்புரிதல் மரபு. எனவே இவை கரந்தை எனச் சிறப்பிக்கப்பட்டன.

16. **காட்சி:** கரந்தைப் போரில் உயிர்துறந்த வீரரை நடுகல்லில் நிறுத்தி வழிபாடு செய்வதன் பொருட்டு உரிய கல்லைக் கண்டு தேர்ந்தெடுத்தல்.

17. **கல்கோள்:** தேர்ந்தெடுத்த கல்லைக் கொண்டு வருதல்.

18. **நீர்ப்படை:** தேர்ந்தெடுத்த அக்கல்லை நீரிலிட்டுக் கழுவித் தூய்மைப்படுத்துதல். **(எ-டு)**

> பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
> நாவுடை நன்மணி நன்(கு)இயம்ப - மேவார்
> அழல்மறங் காற்றி அவிந்தாற்(கு)என்(று) ஏத்திக்
> கழல்மறவர் கைக்கொண்டார் கல். (பு.வெ.மாலை. பொதுவியல். 8)

19. **நடுதல்:** அக்கல்லினை ஆராய்ந்து தேர்ந்த ஓரிடத்தில் நல்ல நாளில் நடுதல்.

20. சீர்த்தகு சிறப்பின் **பெரும்படை :** நடப்பட்ட கல்லிற்குத் தக்க மரபினை உடைய கோயில் அமைத்தல்.

21. **வாழ்த்தல்:** கோயில் எடுக்கப்பட்ட நடுகல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்தல்.

**என்று இருமூன்று வகையின் கல்லொடு புணரச் சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே:** இவ்வாறாக நடுகல்லோடு சேர்த்துக் கூறப்பட்ட ஆறோடும் கூட்டக் கரந்தைக்குரிய துறைகள் இருபத்து ஒன்றாகும்.

மேற்கூறப்பட்ட கரந்தைத் திணைக்குரிய பதினைந்து துறைகளுள் 1.ஆரமர் ஒட்டல் 2..ஆபெயர்த்துத் தருதல்



3.வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தல் 4.நெடுமொழி கூறல் 5.வருதார் தாங்கல் 6.வாள்வாய்த்துக் கவிழ்தல் 7.பிள்ளையாட்டு என்னும் ஏழ் துறைக்கும் உரிய மரபினை உடையது சீர்மிகு கரந்தைத் திணை என்கிறார் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியர் கல்லொடு புணர்த்துக் கூறும் துறைகளைக் **காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை** என்னும் ஐந்து காதைகளாகச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத்தில் இடம்பெறச் செய்துள்ளார். (5)

## வஞ்சித் திணையின் இலக்கணம்

> **64. வஞ்சி தானே முல்லையது புறனே**
> **எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**
> **அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.**

**(இ-ள்)** வஞ்சியாகிய புறத்திணை **முல்லை**யாகிய அகத்திணைக்குப் புறனாக அமைவது. பிறர் மண்ணைக் கைப்பற்றுவதில் அடங்காத ஆசை கொண்டவர்கள் அரசர்கள். அவ்வாறு மண்ணாசை கொண்ட மன்னன் ஒருவன் அஞ்சிக் கலங்கும்படி பகை மன்னன் சினந்து படைதிரட்டிக் கொண்டு எதிர்த்துப் போர்செய்து தன்ஆற்றலை வெளிப்படுத்தி வெற்றி பெறுவான். இதுவே வஞ்சித்திணையாகும்.

அடங்காத மண்ணாசையால் அரசர்களுள் ஒருவருக்கொருவர் கண்டோர் அச்சமுறும்படி போர் செய்வது வஞ்சியாகும். தம்நாட்டு எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்னும் குறிக்கோள் கொண்ட மன்னனை எதிர்த்து இவ்வஞ்சிப்போர் நடைபெறும்.

### வஞ்சி முல்லைக்குப் புறனாதல்

பிறர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்வதாகிய வஞ்சிப்போருக்கு நீரும் நிழலும் உள்ள காலம் வேண்டும். அதற்குக் காட்டையும் கார்காலத்தையும் முதற்பொருளாகக் கொண்ட முல்லை நிலமே பொருந்தி வரும். இப்போருக்குப் பெருமரக் காடாகிய குறிஞ்சி நிலம் ஆகாது. எனவே முல்லைக்கு வஞ்சி புறனாயிற்று என்கிறார் இளம்பூரணர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து பாசறையில் இருத்தல்; தலைவி தலைவனைப் பிரிந்து மனையில் இருத்தல் என முல்லைக்குரிய உரிப்பொருள் ஒத்திருத்தலால் முல்லைக்கு வஞ்சி புறனாயிற்று என்கிறார் நச்சினார்க்கினியர். (6)

Scanned with CamScanner

**16.பொருளொடு புணர்ந்த பக்கம்:** அழியும் தன்மைகொண்ட உலகப் பொருள்களிலிருந்து நீங்கி அழிவற்ற உண்மைப் பொருளாகிய இறைவனை உணர்தல். **(எ-டு)**

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. (குறள்.354)

பொதுவாகப் பொருள் என்றதனால் நாடு, அரண், பொருள், அமைச்சு, நட்பு, படை போன்றவற்றோடு புதல்வர்ப் பேற்றிலும் மிகுதிப்பட நிற்றல் வாகையாகும் என்கிறார் இளம்பூரணர்.

**17.அருளொடு புணர்ந்த அகற்சி:** திருவருளொடு பொருந்திய துறவுநெறியில் சிறந்து விளங்குதல். அதாவது **யான்** என்னும் **அகப்பற்றையும் எனது** என்னும் **புறப்பற்றையும்** நீக்குதல். எதன்மீதும் பற்றுக் கொள்ளாமல் அருளுடைமையைக் கைக்கொண்டு மற்றவற்றை விட்டு முழுமையாக நீங்குவதே அகற்சியாகும்.

அருள் என்பது ஏதேனும் ஓர் உயிர் துன்பப்படும் நிலையில் அது தன்னுயிர்க்கு ஏற்பட்டது போல எண்ணி வருந்தும் இரக்க உணர்வு.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்

என்னும் வள்ளலார் கூற்று இதற்கு முழுதும் பொருந்துவதாகும்.

**18.காமம் நீத்த பால்:** ஆசையிலிருந்து முழுமையாக நீங்கி மேம்பாடு அடைதல். இது அவா அறுத்தலாகும். **(எ-டு)**

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (குறள்.360)

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள். (திருமந்திரம்.2615)

என்பன ஆசை அறுத்தல் பற்றிய முன்னோர் அறிவுரைகள்.

இவ்வாறு கூறப்பட்ட பதினெட்டும் வாகைத் திணைக்குரிய துறைகளாகும். *(17)*

## காஞ்சித் திணையின் இலக்கணம்

76. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கரும் சிறப்பின் பல்நெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே.

**(இ-ள்)** காஞ்சித் திணை என்பது பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். ஒருவருக்குத் துணையாகும் தன்மை அற்றதாய் நிலையாமை கொண்டு விளங்குவது இவ்வுலகம். பலவகையிலும் அழியும் தன்மை கொண்ட இவ்வுலகத்தைப் பொருந்தி நிற்கும் நெறியை உடையது காஞ்சித் திணையாகும்.



அழியும் உலகத்தின்மீது பற்றுவைப்பதை விட்டு அழியாத வீடு பேற்றை உறுதிப்பொருளாகக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்துவதே காஞ்சித் திணையின் பொருண்மையாகும்.

**காஞ்சி** என்னும் சொல்லிற்கு **நிலையாமை** என்பது பொருளாகும். நிலையாமையை எடுத்துக்கூறும் நூல் மதுரைக்காஞ்சி எனப்பெயர் பெற்றுள்ளதும் ஈண்டு அறியத்தக்கது.

### காஞ்சி பெருந்திணைக்குப் புறனாதல்

அன்பின் ஐந்திணைகளுக்குப் புறனாக அமைவது பெருந்திணை. அதுபோல வெட்சி முதலாகிய புறத்திணை ஐந்தற்கும் புறனாக அமைவது காஞ்சி. துன்பமுறும் காமப்பகுதியாக அமைவது பெருந்திணை. நிலையாமையாகிய துன்பத்தைக் கூறுவது காஞ்சி. இவற்றால் பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று என்கிறார் இளம்பூரணர்.

உலகம் ஒருவருக்குத் துணையாகாமை - இளமை, செல்வம், யாக்கை ஆகியவை நிலையாத் தன்மை உடையனவாய் இருத்தல். **(எ-டு)**

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (குறள்.332)

இது செல்வ நிலையாமையை உணர்த்தியது.

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டு நெடுந்திரைகள் – நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாது எம்பிரான் மன்று. (நீதிநெறி விளக்கம்.1)

இப்பாடல் இளமை, செல்வம், உடல் ஆகியவை நிலையில்லாதவை என்பதைக் காட்டுகிறது. *(18)*

## காஞ்சித் திணையின் துறைகள் (10 + 10 = 20)

77. மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்[1]
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்[2]
பண்புற வருஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்[3]
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்[4]
இன்னன்என்று இரங்கிய மன்னை யானும்[5]
இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத்
துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும்[6]
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்[7]

Scanned with CamScanner

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே. (புறநானூறு.184)

இப்பாடல் பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுரை கூறியது.

8.செவியறிவுறூஉ: சான்றோர்க்குக் கட்டுப்பட்டு அடங்கி நடத்தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும் எனச் செவிக்கு அறிவுறுத்துவது செவியறிவுறூஉ (செய்யுளியல். நூ.110) ஆகும்.

9. ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்து: அரசரைக் குறித்து அமைவதாய் நின்குல தெய்வம் காக்கப் பழியற்ற செல்வத்தோடு நீயும் உன் மரபினரும் இனிது வாழ்க என வாழ்த்துவது புறநிலை வாழ்த்து (செய்யுளியல். நூ.106) ஆகும்.

10. கைக்கிளை வகை: ஒரு மருங்கு பற்றியதாய் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டது கைக்கிளை ஆகும். மேற்கூறப்பட்ட ஆறனைப் போல இவையும் பாடாண் பாட்டாகவே கொள்ளப்படும். (29)

## பாடாண் திணையின் துறைகள் (13)

88. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்[1]
கூத்தரும்[2] பாணரும்[3] பொருநரும்[4] விறலியும்[5]
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினில் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்[6]
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்[7]
நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்[8]
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்[9]



மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்[10]
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்[11]
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்[12]
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை[13] உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே.

**(இ-ள்)** மேற்கூறிய துறைகளோடு துயிலெடை நிலை முதலாக ஓம்படை ஈறாகக் கூறப்பட்டவை பாடாண் திணைத் துறைகளாகும். இவை யாவும் அடங்கத் தோன்றும் உலக வழக்கினால் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் காலம் மூன்றோடும் பொருத்திக் காணும் நிலையில் இவை அனைத்தும் மேற்கூறிய பாடாண் திணையாகக் கொள்ளப்படும்.

1. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய **துயிலெடை நிலை:** இனிய உறக்கத்திலிருந்த அரசன் அழிவில்லாத நல்ல புகழைப் பொருந்தி வாழ வேண்டும் என அவ்வரசனின் உறக்கம் களையும்படி சூதர் திருப்பள்ளியெழுச்சி பாடுதல் **துயிலெடை நிலை** ஆகும்.
(சூதர் - புகழ்ந்து பாடுவோர்)

2. **கூத்தரும் 3.பாணரும் 4.பொருநரும் 5.விறலியும்** ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்:

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் வள்ளல்களிடமிருந்து பரிசில் பெற்றுத் திரும்பிச் செல்வர். தாம் செல்லும் வழியில் எதிர்ப்பட்ட தம்மினத்து வறியவர்களைக் காண்பர். தாம் பரிசில் பெற்று வளமடைந்த நிலையை அவர்களிடம் எடுத்துக் கூறுவர்.

இன்ன வழியில் சென்று இத்தன்மையுடைய வள்ளலைக் கண்டால் இவற்றைப் போல் பரிசில் பெறலாம் என அறிவுறுத்திப் பயனடைய வழிகாட்டுவர். இதுவே **ஆற்றுப்படையின்** இயல்பாகும். இது ஆற்றுப்படுத்துவோரின் இயல்பிற்கு ஏற்பக் **கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை** எனப் பெயர்பெறும்.

நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற்ற **கூத்தன்** மற்றொரு **கூத்தனை** ஆற்றுப்படுத்தியது மலைபடுகடாம் என்னும் **கூத்தராற்றுப்படையாகும்.** இதன் ஆசிரியர் **பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.**

Scanned with CamScanner

கண்ணீர் நனைக்கும் கடுமைய காடுஎன்றால்
என்நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு. (பாலைக்கலி. 5)

இப்பாடல் தலைவியை உடன்அழைத்துக் கொண்டு செல்வாயாக; வேறு காரணம் கூறித் தட்டிக் கழிக்காதே எனத் தலைவனிடம் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

விளம்பழம் கமழும் கமஞ்சூல் குழிசிப்
பாசம் தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோள்
இவைகாண் தோறும் நோவர் மாதோ
அளியரோ அளியர்என் ஆயத் தோர்என
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே. (நற்றிணை.12)

இப்பாடல் தோழியர் வருந்துவர் என எண்ணி உடன்போக்கைத் தவிர்க்குமாறு தோழி தலைவனிடம் கூறுவதாகும்.

நாளும் நாளும் ஆள்வினை அழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையால் புகழென
ஒண்பொருட்கு அகல்வர்நம் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே (சிற்றட்டகம்)

இப்பாடல் தலைவனின் பிரிவை எண்ணி வருந்திய தலைவியைப் பார்த்துப் பொருளின் சிறப்பைக் கூறி வருந்தாதே எனத் தோழி கூறியது.
(42)

**கண்டோர் கூற்று (6)**

**43. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி**
**வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்[1]**
**ஊரது சார்பும் செல்லும் தேயமும்**
**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்[2]**
**புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு**
**அழிந்துஎதிர் கூறி விடுப்பினும்[3] ஆங்குஅத்**
**தாய்நிலை கண்டு தடுப்பினும்[4] விடுப்பினும்[5]**
**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்[6]**
**கண்டோர் மொழிதல் கண்டது என்ப.**



**(இ-ள்)** அச்சம் தரும் காலம், வழி போன்றவற்றை எடுத்துக் கூறுதல் முதலாக நீண்ட தொலைவு சென்று திரும்பும் தலைமக்களுடன் பேசுதல் ஈறாக அமைந்த அனைத்தும் கண்டோர் சொல்லுதல் வழக்கில் காணப்பட்டவை என்று சொல்லுவர் புலவர்.

**1.பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டல்:**தலைவன் தலைவியராகிய நீங்கள் செல்லுகின்ற காலமும் வழியும் அச்சத்தைத் தருவனவாக அமைந்துள்ளன. அவற்றில் பிழை ஏற்படின் உண்டாகும் துன்பங்கள் இவை எனக் கண்டோர் எடுத்துக் கூறுதல்.

**2.ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழி:** எங்கள் ஊர் மிகவும் அருகில் உள்ளது; நீங்கள் செல்ல விரும்பும் ஊரோ நீண்ட தொலைவில் உள்ளது எனக் கூறி அருள் கொண்ட நெஞ்சத்தால் எங்கள் ஊருக்கு வந்து இரவில் தங்கிச் செல்லலாமா? எனக் கேட்டல்.

**3.புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்துஎதிர் கூறி விடுத்தல்:** அன்பால் ஒன்றுபட்டோரின் காதலைப் பாராட்டி அழைத்த நிலையிலும் தங்களின் பேச்சைக் கேளாமல் செல்லும் அவர்மீது அன்பால் வருத்தம் கொண்டு விரைவாக சென்றுவருக என விடுத்தல்.

**4.ஆங்குஅத் தாய்நிலை கண்டு தடுத்தல்:** தலைமக்களைத் தேடிக்கொண்டு வரும் செவிலித்தாயின் செயலினைக் கண்டு அவளை மேற்கொண்டு செல்லாமல் தடுத்தல்.

**5.விடுத்தல்:** காதலர்தம் நிலையினை எடுத்துக் கூறி அவளைத் திரும்பிப் போகுமாறு கூறுதல்.

**6.சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்:**நீண்ட தொலைவில் இருக்கும் ஊருக்குத் தலைமக்கள் செல்லும்போதும் திரும்பி வருகின்ற நிலையிலும் வழியில் காண்போர்க்குக் கூற்று நிகழும்.
**(எ-டு)**

எம்ஊர் அல்லது ஊர்நணித்து இல்லை
வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
அரிய சேய பெருங்கல் ஆறே (சிற்றட்டகம்)

என்பது ஊரையும் பொழுதையும் சுட்டிக்காட்டித் தலைவன் தலைவியரைத் தம் ஊரில் தங்கிச் செல்லுமாறு கண்டோர் கூறியது.

நெருப்பவிர் கனலி உருப்புச்சினம் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழல் இரீஇச்
சிறுவரை இறப்பில் காண்குவை செறிதொடிப்

Scanned with CamScanner

அதனை அறிந்த மனைவி ஊடல் கொண்டு தலைவனைப் புறக்கணிப்பாள். அதனால் **மருதத்திற்கு வைகறையும் விடியலும்** சிறப்பாயின.

தனிமையில் வருந்தும் பெண்களுக்கு அவ்வருத்தம் பகலைவிட இரவில் அதிகமாகும். எற்பாடாகிய பிற்பகலைக் கண்டு இனிவருவது மாலை என வருந்துவர். எனவே **நெய்தலுக்கு எற்பாடு** சிறந்ததாயிற்று.

பிரிந்து சென்ற தலைமகன் தன்னை நினைத்து வருந்துவான் எனக் கவலை கொள்வாள் தலைவி. அந்நிலையில் அவள் நீரும் நிழலும் இல்லாத கொடிய பாலைநிலத்தின் வழியைக் கடந்து தலைவன் சென்றான் என மிகவும் கவலை கொள்வாள். இதனால் **பாலைக்கு வேனிலும் நண்பகலும்** சிறந்தவையாயின. (12)

## பாலைக்குரிய இருவகைப் பிரிவுகள்

13. **இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர்.**

**(இ-ள்)** 1.தலைமகளைத் தனிமையில் விட்டுத் தலைவன் பிரிந்து செல்லுதல் 2.தலைவியொடு கூடி உடன்போக்கை மேற்கொள்வதால் தம் உறவினரைப் பிரிந்து செல்லுதல் என்பன இரண்டும் பிரிவுகளாகும். இவற்றைப் பாலைத் திணைக்குரிய பிரிவுகள் என்று கூறுவர் புலவர்.

பிரிந்து செல்லுதலே அல்லாமல் மேற்கூறிய இருவகைகளில் பிரிந்து செல்லவும் நினைப்பர். அவ்வாறு நினைப்பதும் பாலைத் திணை என்பது இளம்பூரணரின் விளக்கமாகும்.

இருவகைப் பிரிவு என்பதற்கு நச்சினார்க்கினியர் **காலிற் பிரிவு** (நிலத்தின்வழிப் பிரிதல்), **கலத்திற் பிரிவு** (கடல்வழிப் பிரிதல்) எனப் பொருள் கூறுகிறார். (13)

## திணை மயக்கம்

14. **திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**
**நிலன்ஒருங்கு மயங்குதல் இல்லென மொழிப**
**புலன்நன்கு உணர்ந்த புலமை யோரே.**

**(இ-ள்)** மேற்கூறிய முறையில் அல்லாமல் ஒரு திணைக்கு உரியவை எனக் கூறப்படும் முதற்பொருள்கள் மற்றொரு திணைக்கும் உரியதாக வரும். அவ்வாறு வருவதனை நீக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். அம்முதற்பொருள்களுள் நிலம் தம்முள் மயங்குவதில்லை என்று சொல்லுவர் புலவர். பெரும்பொழுது, சிறுபொழுதுகளே மயங்கிவரும் என்பது திணைகளின் தன்மைகளை நன்கு உணர்ந்த புலவர்களின் கருத்தாகும்.

**விளக்கம் :** முதற்பொருளில் மலை முதலாகிய நிலங்கள் மயங்குவதில்லை. **தொல்லூழித் தடுமாறி** (பா.12) எனத் தொடங்குவது **நெய்தற்கலிப்** பாடலாகும்.



இப்பாடலில் அமைந்த

**எல்லைக்கு வரம்பாய இடும்பைகூர் மருள்மாலை**

என்னும் தொடரில் **முல்லைத் திணைக்குரிய** சிறுபொழுதாகிய **மாலைப்பொழுது** இடம்பெற்றுத் திணைமயக்கமாயிற்று.

கருங்கால் **வேங்கை** வீயுகு துறுகல் (பா.47)

என்பது குறுந்தொகைக் குறிஞ்சித் திணைப்பாடல். இதில் வேங்கைப்பூ மலர்ந்ததாகக் குறிக்கப்படுகிறது. வேங்கை வேனிற்காலத்தில் பூக்கும் இயல்புடையது. எனவே குறிஞ்சித் திணையில் **பாலைக்குரிய** பெரும்பொழுதாகிய **வேனில்** மயங்கி வந்தது. (14)

## உரிப்பொருள் மயங்காமை

15. **உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.**

**(இ-ள்)** ஒவ்வொரு திணைக்கும் உரிமை கொண்டது ஒழுக்கமாகிய உரிப்பொருளாகும். அவ்வுரிப்பொருள் அல்லாத **கருப்பொருள்கள், பொழுதுகள்** ஆகியவை உரிய திணைகளுக்கே அல்லாமல் பிற திணைகளிலும் கலந்து வரும்.

**விளக்கம் :** உரிப்பொருள் மயங்குவதில்லை. எனவே காலமாகிய முதற்பொருளும் கருப்பொருள்களுள் பூ, பறவை ஆகியவையும் மயங்கி வரும் என்கிறார் இளம்பூரணர். (எ-டு)

**ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்**
**ஊசி போகிய சூழ்செய் மாலையன்**
**பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்** (அகநானூறு. 48)

என்னும் குறிஞ்சித் திணைப் பாடல் அடிகளில் **மருதத்திற்குரிய கழுநீர் மலரும் குறிஞ்சிக்குரிய வெட்சிப்** (செச்சைப்) பூவும் கலந்து வந்தன.

இந்நூற்பாவிற்கு உரிப்பொருள் என்று ஓதப்படும் ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் நால்வகை நிலத்திலும் மயங்கவும் பெறும் என்கிறார் நச்சினார்க்கினியர். (15)

## உரிப்பொருள்கள் (5 + 5 = 10)

16. **புணர்தல்[1] பிரிதல்[2] இருத்தல்[3] இரங்கல்[4]**
**ஊடல்[5] அவற்றின் நிமித்தம்[10] என்றுஇவை**
**தேருங் காலை திணைக்குஉரிப் பொருளே.**

**(இ-ள்)** அகவாழ்வை நன்கு ஆராய்ந்து பார்க்கும் நிலையில் வெளிப்படும் செயல்கள் ஐந்து. அவை 1.புணர்தல் 2.பிரிதல் 3.இருத்தல் 4.இரங்கல் 5.ஊடல் என்பன. அவ்வைந்தும் அவற்றிற்குரிய காரணமாகிய நிமித்தங்களும் (சூழல்களும்) திணைக்கு உரியவை என வரையறை செய்யப்பட்ட ஒழுக்கங்களாகும். இப்பத்தும் திணைகளுக்குரிய உரிப்பொருள்கள் என்று கூறப்படும்.

Scanned with CamScanner

மேற்கூறிய எட்டனுள் கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் முதல் தோலது பெருக்கம் ஈறாக அமைந்த நான்கும் அரணைக் கைப்பற்றுவதற்கும் எஞ்சிய நான்கும் அரணைக் காப்பதற்கும் உரியவை. அரணைக் கைப்பற்றக் கருதுபவன் - புறத்து வேந்தனாகிய உழிஞையரசன். அகத்திலிருப்போன் அரணைக் காப்பதற்கு முயலும் நொச்சிவேந்தன்.

**உழிஞையார்க்கு உரியவை - 4**

**1.கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்:** தன்னை அரசனாக ஏற்றுக் கொள்ளாதவர், தன் கட்டளையைக் கேட்காதவர் என்னும் இருதிறம் கொண்ட பகைவர் நாடுகளையும் கைப்பற்றி வெற்றி கொண்டதாய் நினைத்தல். **(எ–டு)**

வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந
மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்நோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண்டு அன்ன முன்பொடு
மாற்றுஇரு வேந்தர் மண்நோக் கினையே. (புறநானூறு.42)

**2. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு:** கோட்டையைக் கைப்பற்ற நினைத்ததை முடித்துக் காட்டும் அரசனின் சிறப்பு. அத்துடன் நொச்சி அரசனை அழித்த தன்மையை எடுத்துரைத்தலும் இத்துறையாகும்.

**3. தொல்எயிற்று இவர்தல்:** பகைவர்களின் பழமை வாய்ந்த மதிலின்மீது உழிஞை மறவர்கள் பெருங்கூட்டமாக ஏறி நின்று போர்செய்தல். **(எ–டு)**

புல்லார் புகலொடு போக்(கு)ஒழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி - ஒல்லார்
நிறுத்(து)இறுத்த வாள்தானை நேரார் மதிலின்
புறத்(து)இறுத்தான் பூங்கழலி னான். (பு.வெ.மாலை. உழிஞை.9)

**4.தோலது பெருக்கம்:** பகைவரின் தாக்குதலைத் தடுக்கும் தோலாகிய கிடுகுப் படையின் (கேடயம்) பெருமையினைக் கூறுதல். **(எ–டு)**

நின்ற புகழ்ஒழிய நில்லா உயிர்ஓம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும் - வென்(று)ஒளிரும்
பாண்டில் நிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டின் எளி(து)என்றான் வேந்து. (பு.வெ.மாலை. உழிஞை.11)

**நொச்சி யார்க்கு உரியவை - 4**

**5.அகத்தோன் செல்வம்:** மதிலினது உள்ளே அகப்பட்ட நொச்சி அரசனின் செல்வ மிகுதியைக் கூறுதல். **(எ–டு)**



அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளி கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே. (புறநானூறு.109)

இது மூவரால் முற்றுகையிடப்பட்ட பாரியின் பறம்புமலையினது வளத்தை எடுத்துரைக்கிறது.

**6.**அன்றி முரணிய **புறத்தோன் அணங்கிய பக்கம்:** அதுவல்லாமல் கோட்டைக்கு வெளியில் முற்றுகையிட்டிருக்கும் அரசன் வருந்தும்படி அரணுள்ளே இருப்போர் வலிமையுடன் எதிர்த்துப் போர் செய்தல்.

**7.திறல்பட ஒருதான் மண்டிய குறுமை:** தம் மறவர்களை இழந்த நிலையில் தன்வலிமை வெளிப்படும்படி நொச்சியரசன் தனிஒருவனாக வந்து போர்புரிதல். இதனைக் குற்றுழிஞை என்பர் இளம்பூரணர். **(எ–டு)**

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கஅவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அயினியும் இன்றுஅயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே. (புறநானூறு.77)

**8.** உடன்றோர் வருபகை பேணார் **ஆர்எயில்:** சினம் கொண்டு எதிர்த்துப் போர் செய்ய வருகின்ற உழிஞைப் படையைப் பொருட்படுத்தாது அருமைப்பாடு வாய்ந்த மதில்மீது நின்று போர்செய்யும் நொச்சி மறவரின் வலிமையைக் கூறுதல். **(எ–டு)**

மயில்கணத்து அன்னார் மகிழ்தேறல் ஊட்டக்
கயில்கழலார் கண்கனல் பூப்ப - எயில்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ!
மாயப்போர் மன்னன் மதில். (பு.வெ.மாலை. உழிஞை. 10)

இவ்வாறு இரண்டு வகையாகப் பகுத்துக் கூறப்பட்ட எட்டும் உழிஞைத் திணைக்கு உரியவையாகும். (10)

Scanned with CamScanner

ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்[9]
பகட்டி னானும் ஆவி னானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்[10]
கடிமனை நீத்த பாலின் கண்ணும்[11]
எட்டுவகை நுதலிய அவையகத் தானும்[12]
கட்டுஅமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்[13]
இடையில் வண்புகழ்க் கொடையி னானும்[14]
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்[15]
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்[16]
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்[17]
காமம் நீத்த பாலினா னும்[18] என்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே.

**(இ-ள்)** கூதிர்ப்பாசறை முதலாகக் காமம் நீத்த பால் இறுதியாகச் சொல்லப்பட்டவை பதினெட்டு. இவை அனைத்தும் வாகைத் திணைக்கு உரியவை.

**1. கூதிர், வேனில் என்றுஇரு பாசறைக்** காதலின் ஒன்றிக் கண்ணிய வகை: போரின்மீது கொண்ட தீரா வேட்கையால் மனைவியைப் பிரிந்து கூதிர்காலப் பாசறை, வேனிற்காலப் பாசறை என்னும் இரண்டு இடங்களிலும் தங்கிப் போரினை மேற்கொள்ளுதல்.

**கூதிர்ப் பாசறை**

(எ-டு) கவலை மறுகில் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை ஒடுங்கத் - துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாள் முயக்கு. (பு.வெ.மாலை.வாகை.14)

2. ஏரோர் களவழி அன்றிக் **களவழித் தேரோர் தோற்றிய வென்றி :** உழவுத் தொழிலின் சிறப்பால் விளைவு மிகுந்து வெற்றி பெறுவர். அவ் உழவர்கள் களத்து மேட்டில் பல அறச்செயல்கள் செய்து மகிழ்ந்து பாடுவது அறக்களவழியாகும். அதனைப் போல் பகைவரை அழித்த வெற்றியால் மகிழ்ந்த அரசர்கள் பரிசிலர்க்குப் பலவகைப் பொருள்களைக் கொடுக்கும் போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்துப் பாடுவது மறக்களவழியாகும்.

3. தேரோர் வென்ற கோமான் **முன்தேர்க் குரவை:** தேர்ப்படை உடைய பகை அரசனைப் போரிட்டு வென்ற அரசனின் தேரின்முன் குரவைக் கூத்து ஆடுதல். **(எ-டு)**

............
களிற்றுக்கோட் டன்ன வாலெயிறு அழுத்தி
விழுக்கொடு விரைஇய வெள்நிணச் சுவையினள்



குடர்த்தலை மாலை சூடி உணத்தின
ஆனாப் பெருவளம் செய்தோன் வானத்து
வயங்குபல் மீனினும் வாழியர் பலவென்
உருகெழு பேய்மகள் அயரக்
குருதித்துகள் ஆடிய களங்கிழ வோயே. (புறநானூறு. 371)

**4. ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவை:** முன்தேர்க்குரவையின் மரபினைப் பொருந்தித் தேரின்பின் நின்று குரவைக் கூத்தாடுதல். **(எ-டு)**

வஞ்சம்(இ)லாக் கோலானை வாழ்த்தி வயவரும்
அம்சொல் விறலியரும் ஆடுபவே - வெஞ்சமரில்
குன்(று)ஏர் மழகளிறும் கூந்தல் பிடியும்போல்
பின்தேர்க் குரவை பிணைந்து. (பு.வெ.மாலை. வாகை. 7)

**5.பெரும்பகை தாங்கும் வேல்:** பெரிய பகைவரை அழிக்கக் காரணமான வேலினது நிலையைச் சிறப்பித்துக் கூறுதல். **(எ-டு)**

இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனகர் அவ்வே இவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம்கொடுத்து
இல்லாயின் உடன்உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே. (புறநானூறு.95)

**6.அரும்பகை தாங்கும் ஆற்றல்:** போர் செய்வதற்கு அரிய பகைவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் மிக்க வெற்றியினைக் கூறுதல். **(எ-டு)**

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர்எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே. (புறநானூறு.87)

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர். (குறள்.771)

**7.புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்:** பொருந்திய வாழ்க்கை வாழ முடியாத வறுமை நிலையிலும் வெற்றி அடைந்த மறவனின் மிகப்பெரிய ஆற்றலைப் புகழ்தல்.

8. ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத் தொல்லுயிர் வழங்கிய **அவிப்பலி:** பகைவர் நாணம் அடையும்படியாகத் தன் அரசனைக் குறித்து முன்பு சூளுரைத்தான் மறவன் ஒருவன்.

Scanned with CamScanner

கைக்கிளை - இன்பம் பயப்ப வருவது.
பெருந்திணை - துன்பம் பயப்ப வருவது.

இந்நூற்பாவிற்குக் **காட்சி, ஐயம், துணிதல், குறிப்பறிதல்** என்னும் நான்கும் முற்கூறப்பட்ட கைக்கிளைக்கு உரியவை என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார். (55)

### அகப்பொருளுக்குரிய பா வகைகள் (2)

**56. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே[1] பரிபாட்டு[2] ஆயிரு பாவினும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர்.**

**(இ-ள்)** நாடக வழக்கம் என்றும் உலக வழக்கம் என்றும் கூறப்படும் இவ்விரு வகைப்பட்ட வழக்காறுகளையும் கொண்டு பாடப்படுவது அகப்பொருளாகும். இது 1.கலிப்பா 2.பரிபாடல் என்னும் இரண்டு வகைச் செய்யுள்களாலும் சிறப்பாகப் பாடுவதற்கு உரிமை கொண்டது என இலக்கண நெறியை அறிந்த புலவர் கூறுவர்.

**நாடக வழக்கு** : இலக்கியச் சுவைக்காகக் கற்பனை கூட்டிப் புனைந்துரைத்தலும் சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதலும் நாடக வழக்காகும். ஒத்த இயல்புடைய தலைவன், தலைவியர் அன்பினால் ஒன்றுபட்டுத் தனியிடத்தே காணுதல். கொடுப்போரும் கொள்வோரும் இல்லாமல் வேட்கை மிகுதியால் இயற்கைப் புணர்ச்சியில் ஒன்றுபடுதல். தொடர்ந்து களவொழுக்கத்தை மேற்கொள்ளுதல். பின்னர் இலக்கண முறைக்கு ஏற்பத் திருமணம் செய்துகொள்ளுதல் எனக் கேட்பவர் விரும்புமாறு அமைப்பது நாடக வழக்கு. கைக்கிளை முதல் பெருந்திணை - நாடக வழக்கு.

**உலக வழக்கு** : உலகத்தார் மேற்கொள்ளும் இயல்பான வாழ்க்கையினை எடுத்துரைப்பது உலக வழக்கு ஆகும்.

உலக வழக்கு - புறப்பொருளுக்கு உரியது.

நாடக வழக்கும் உலக வழக்கும் பாடல்சான்ற புலனெறி வழக்கமாகிய அகப்பொருளுக்கு உரியவை.

அகப்பொருளுக்குரிய பாக்கள் - கலி, பரிபாடல்கள்
புறப்பொருளுக்குரியவை - எஞ்சிய பாக்கள். (56)

### அகப்பொருளில் இயற்பெயரின் நிலை

**57 மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**
**சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.**



**(இ-ள்)** மக்களின் அகவாழ்வை வரையறுத்துக் கூறுபவை அன்பின் ஐந்திணைக்குரிய ஒழுக்கங்களாகும். இவற்றைப் புலப்படுத்தும் பாடல்களில் தலைவன், தலைவியரை இயற்பெயரால் சுட்டுகின்ற வழக்கம் இல்லை.

அகப்பொருளில் இடம்பெறும் தலைமக்களின் இயற்பெயரைச் சுட்டுவதில்லை. எனவே ஐவகை நிலங்களுக்கும் உரிய பொதுப் பெயரால் சுட்டிக் கூறுவது அகத்திணை மரபாகும்.

| திணை | தலைமகன் | தலைமகள் |
| --- | --- | --- |
| குறிஞ்சி | வெற்பன், சிலம்பன் | கொடிச்சி |
| பாலை | விடலை, காளை | எயிற்றி |
| முல்லை | தோன்றல், பொதுவன் | கிழத்தி |
| மருதம் | ஊரன், மகிழ்நன் | மனைவி |
| நெய்தல் | சேர்ப்பன், புலம்பன் | பரத்தி |

ஆர்கலி **வெற்பன்** வருதொறும் வரூஉம் (குறுந்தொகை.257)
வண்டுபடு கூந்தல் தண்தழைக் **கொடிச்சி** (ஐங்குறுநூறு. 256)
தொலைவில் வெள்வேல் **விடலை**யொடு தன்மகள் (அகநானூறு.7)
வெவ்விருந்து அயரும் **மனைவி** (நற்றிணை.121) (57)

### புறப்பொருளில் இயற்பெயர் இடம்பெறுதல்

**58. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது**
**அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.**

**(இ-ள்)** இயற்பெயரைக் கூறி அவர்தம் சிறப்புகளை எடுத்துரைத்தல் என்பது புறத்திணைப் பாடல்களில் முழுமையும் பொருந்தி வரும். அகப்பொருளில் இம்முறை சிறிதும் இடம்பெறக் கூடாது.

புறப்பொருள் - ஒருவரைச் சார்ந்து வருவது.
அகப்பொருள் - ஒருவரைச் சாராமல் அனைவருக்கும் பொதுப்பட வருவது.

ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை
கடந்தடு தானைச் **சேர லாதன்** (புறநானூறு.8)

என்னும் தொடரில் சேரலாதன் என்பது குடிப்பெயர்.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களியியல் யானைக் **கரிகால் வளவ** (புறநானூறு.66)

என்னும் தொடரில் கரிகால்வளவன் என்பது இயற்பெயர். (58)

(எ-டு)

சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே .....
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே
.......
இனிப், பாடுநரும் இல்லைப் பாடுநர்க்குஒன்று ஈகுநரும்இல்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி ஆங்குப் பிறர்க்குஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே. (புறநானூறு. 235)

என்பது அதியமானின் இயல்பைக் கூறி ஔவையார் வருந்துவதாகும்.

6. இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னரும் சிறப்பின் **வஞ்சினம்:** இந்தச் செயலைச் செய்யத் தவறினால் இன்னவாறான இழிநிலையை அடைவேன் எனச் சூளுரைப்பது **வஞ்சினக் காஞ்சி** ஆகும்.
(எ-டு)

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
.........
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின்
.....
**கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவ னாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை** (புறநானூறு.72)

இப்பாடல், என்னைப் பழித்த பகைவரை வெல்வேன். இல்லை என்றால் என்னைக் கொடுங்கோலன் என என்மக்கள் பழிக்கட்டும். என்னை மாங்குடி மருதனின் தலைமையில் அமைந்த புலவர்கள் புகழ்ந்து பாடாமல் போகட்டும் எனப் பாண்டியன் வஞ்சினம் கூறியது.

7.இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன் துன்னுதல் கடிந்த **தொடாஅக் காஞ்சி:** இன்பம் தரும் புன்சிரிப்பினை உடைய மனைவி புண்பட்டுக் கிடக்கின்ற தன் கணவனைப் பேய்கள் நெருங்காதபடி காவல் செய்வது **தொடாக் காஞ்சி** ஆகும்.



(எ-டு)

தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்லியம் கறங்கக்
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலம் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே. (புறநானூறு. 281)

**8. நீத்த கணவன் தீர்த்த வேலின் பெயர்த்த மனைவி ஆஞ்சி:** தன் கணவனின் உயிரைப் போக்கிய வேலினை எடுத்துக் குத்திக் கொண்டு தலைவி தன் உயிரைப் போக்கிக் கொள்ளுதல் **ஆஞ்சிக் காஞ்சி** ஆகும்.
(எ-டு)

கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை!
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன் – அவ்வேலே
அம்பிற் பிறழும் தடங்கண் அவன்காதல்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று. (பு.வெ.மாலை. காஞ்சி. 19)

9. நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய **மகட்பால்:** மன்னன் என்னும் தகுதியால் ஒத்தும் குலத்தால் மாறுபட்டும் நிகர் எனக் கருதிப் பெண்கேட்டு வந்தான் பகையரசன். அவனுக்குத் தொன்மையான தம்குடியில் பிறந்த மகளைத் திருமணம் செய்து கொடுக்க அஞ்சுவது **மகட்பால் காஞ்சி** ஆகும்.

10. முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் **தலையொடு முடிந்த நிலை:** இறந்த தன்கணவனின் தலையோடு தன் மார்பையும் முகத்தையும் சேர்த்து அணைத்துக் கொண்ட அளவில் மனைவி உயிரை விட்டது **தலையொடு முடிதல்** ஆகும். (எ-டு)

கொலைஆனாக் கூற்றம் கொடிதே! கொழுநன்
தலையானாள் தையலாள் கண்டே – முலையால்
முயங்கினாள் வாள்முகமும் சேர்த்தினாள் ஆங்கே
உயங்கினாள் ஓங்கிற்(று) உயிர். (பு.வெ.மாலை.காஞ்சி. 11)

## 2. பெருந்துயரத்தைக் காட்டும் துறைகள் (10)

11. பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் ஆய்ந்த **பூசல் மயக்கம்:** பலரைக் கொன்று பெரிய புகழைப் பெற்றவனாய்ப் போரிட்டு இறந்தான் ஒருவன். அவனைச் சூழ்ந்து நின்ற சுற்றத்தார் அவன் இறந்ததை எண்ணிப் பெரும் துன்பமுற்றுப் பேரொலி செய்து அழுது கலங்குவது **பூசல் மயக்கம்** ஆகும்.

Scanned with CamScanner

சொன்ன சொல்லை நிறைவேற்றியவன் என்று பெரியவர் புகழும்படியாக அம்மறவன் பல பிறப்புகளிலும் தொடர்ந்து வருகின்ற தன்னுயிரை அரசனுக்காகப் பலிகொடுத்தல். **(எ–டு)**

சிறந்தது இதுஎனச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளமர் என்னும் - பிறங்(கு)அழலுள்
ஆருயிர் என்னும் அவிவேட்டார் ஆங்குஅஃதால்
வீரியர்எய் தற்பால வீடு. (பு.வெ.மாலை.வாகை.28)

**9.ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு:** நாடு கைப்பற்றப்பட்ட பின்னர்ப் பகை நாட்டினருடன் சினமின்றிச் சேர்ந்திருத்தல்.

**10. பகட்டி னானும் ஆவி னானும் துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம்:** எருதாலும் (வேளாளர்) பசுவாலும் (வணிகர்) குற்றம் தீர்ந்த சிறப்பினை உடைய அச்சான்றோரின் மேம்பாட்டினைக் கூறுதல். **(எ–டு)**

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனில் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (புறநானூறு. 182)

**11.கடிமனை நீத்த பால்:** பிறருடைய மனைவியை விரும்பாமல் சிறந்த மனையறத்தில் மேம்பட்டு நிற்றல். **(எ–டு)**

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்அன்றோ ஆன்ற ஒழுக்கு. (குறள்.148)

**12.எட்டுவகை நுதலிய அவையகம்:** எட்டு வகையான பாகுபாட்டைக் கொண்டு விளங்கும் அவையத்தாரின் சிறப்பினைக் கூறுதல்.

**எட்டுவகை ஒழுக்கங்கள் :** *1.*நற்குடிப்பிறப்பு *2.*கல்வி *3.*ஒழுக்கமுடைமை *4.*வாய்மை *5.*தூய்மை *6.*நடுவுநிலைமை *7.*பொறாமை இல்லாமை *8.*அவாவின்மை.

**குடிப்பிறப்பு** உடுத்துப் **பனுவல்** சூடி
விழுப்பேர் **ஒழுக்கம்** பூண்டு நாமுற
**வாய்மை** வாய்மடுத்து மாந்தித் **தூய்மையின்**
காதல் இன்பத்துள் தங்கித் தீதறு
**நடுவுநிலை** நெடுநகர் வைகி வைகலும்
**அழுக்காறு இன்மை அவாஅ இன்மை**யென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை (ஆசிரிய மாலை)



**13.கட்டுஅமை ஒழுக்கத்துக் கண்ணுமை:** இல்லறத்திற்கு என வரையறுக்கப்பட்ட எட்டுவகை ஒழுக்கங்களில் மேம்பட்டிருத்தல்.

**இல்லறத்தார்க்குரிய எட்டு வகை ஒழுக்கங்கள்:** *1.*அடக்கமுடைமை - பொறிகளை ஐம்புலன்கள்மீது செல்லாமல் அடக்குதல் *2.*ஒழுக்கமுடைமை - தம்குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கம் உடையராதல் *3.*நடுவுநிலைமை - பகைவரையும் நண்பரையும் ஒன்றாகக் கருதும் நிலை *4.*வெஃகாமை - பிறர் பொருளை விரும்பாமை *5.*புறங்கூறாமை - ஒருவர் இல்லாதவிடத்து அவரைப் பற்றிப் பேசாமை *6.*தீவினை அச்சம் - தீமை தரும் செயல்களைப் பிறருக்குச் செய்ய அஞ்சுதல் *7.*அழுக்காறாமை - பிறருடைய வளர்ச்சி கண்டு பொறாமை கொண்டு மனம் மாறுபடாமை *8.*பொறையுடைமை - பிறர் தமக்கு செய்த தீமை கண்டு சினம் கொள்ளாமை.

அடக்கம்: ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள்.126)

ஒழுக்கம்: ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள். 131)

பொறை: மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல். (குறள். 158)

**14.இடையில் வண்புகழ்க் கொடை:** இடைவிடாத வளமையான மிக்க புகழைத் தருகின்ற கொடையை மேற்கொள்ளல். அதாவது கொடுப்பதற்கு அரிதானவற்றைச் சிபிச்சக்கரவர்த்தி போலக் கொடுத்தல். **(எ–டு)**

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே
..... பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடிழந்து அதனினும் நனிஇன் னாதென
வாள்தந் தனனே தலையெனக்கு ஈயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின் (புறநானூறு.165)

இது தன் தலையைக் கொய்து தன் தம்பியிடம் கொடுத்துப் பரிசில் பெற்று வறுமை நீங்குக எனப் பெருந்தலைச் சாத்தனாரிடம் குமணன் கூறியது.

**15.பிழைத்தோர்த் தாங்கும் காவல்:** தனக்கொரு பெரிய தீங்கினைச் செய்தோரையும் பொறுத்துக் கொண்டு அவரைப் பாதுகாத்தல். **(எ–டு)**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (குறள்.151)

Scanned with CamScanner

1.புணர்தல் 2.புணர்தல் நிமித்தம் - குறிஞ்சி
3.பிரிதல் 4.பிரிதல் நிமித்தம் - பாலை
5.இருத்தல் 6.இருத்தல் நிமித்தம் - முல்லை
7.இரங்கல் 8.இரங்கல் நிமித்தம் - நெய்தல்
9.ஊடல் 10.ஊடல் நிமித்தம் - மருதம்

ஆகிய பத்தும் உரிப்பொருள்கள்.

**விளக்கம்**

1. தலைவன், தலைவியர் கூடி மகிழ்தல் - புணர்தல் (குறிஞ்சி)
2. தலைவன், தலைவியை விட்டுப் பிரிதல் - பிரிதல் (பாலை)
3. தலைவன் பிரிவைத் தலைவி பொறுத்திருத்தல் - இருத்தல் (முல்லை)
4. பிரிவை ஆற்றாமல் தலைவி புலம்பி வருந்துதல் - இரங்கல் (நெய்தல்)
5. பரத்தையரை நாடிய தலைவனைத் தலைவி புறக்கணித்தல் - ஊடல் (மருதம்).

மேற்கூறிய உரிப்பொருள்கள் பெரும்பான்மையும் அவ்வத் திணைகளுக்கே வரும். சிறுபான்மை பிற திணைகளுக்கும் பொருந்தி வரும் என்கிறார் இளம்பூரணர். முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டு பிறந்த பொருள்களுள் சிறப்புடையவர் மக்கள். அம்மக்களுக்குரிய ஒழுக்கங்களே உரிப்பொருள்களாகும். *(16)*

## பிறவகையில் அமையும் உரிப்பொருள்கள் (2)

**17. கொண்டுதலைக் கழிதலும்[1] பிரிந்தவண் இரங்கலும்[2]
உண்டென மொழிப ஓரிடத் தான.**

**(இ-ள்)** 1.தலைவன் தன்தலைவியுடன் உடன்போக்கை மேற்கொள்ளுதல் 2.தலைவன் பிரிந்த நிலையில் அப்பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தலைவி வருந்துதல் ஆகிய இரு செயல்கள் நடைபெறுதலும் உண்டு. இவை மேற்கூறப்பட்ட உரிப்பொருள்களுக்கு மாறாக ஒருசில இடங்களில் அமையும் என்று சொல்லுவர் புலவர்.

1.கொண்டுதலைக் கழிதல் - பாலைத்திணைக்கு உரியது
2.பிரிந்தவண் இரங்கல் - பெருந்திணைக்கு உரியது

**விளக்கம் :** தலைவன், தலைவியோடு சேர்ந்து இடம்பெயர்ந்து செல்வதால் கொண்டுதலைக் கழிதல் புணர்ச்சியிலும் அடங்காது. உடன்கொண்டு செல்வதால் பிரிதலிலும் அடங்காது. எனவே கொண்டுதலைக் கழிதல் வேறாகக் கூறப்பட்டது.

திருமணத்திற்குரிய பொருளைச் சேர்ப்பதற்காகத் தலைவன் தலைவியை நீண்ட காலம் பிரிவான். அது, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலாகும். அப்பிரிவை எண்ணித் தலைவன் தலைவியர் வருந்துவதில்லை. ஊராரின் பழிச்சொல்லைக் (அலரைக்) குறைப்பதற்காகத் தலைவன் தலைவியைத் தொடர்ச்சியாகச் சந்திக்காமல் இடையில் நிறுத்துவான். அது ஒருவழித்தணத்தலாகும். அந்நிலையில் இருவரும் வேட்கை மிகுதியால் வருந்துவர். எனவே இப்பிரிந்தவண் இரங்கல் என்பது இரங்கல் என்னும் உரிப்பொருளில் அடங்காமையால் தனித்துக் கூறப்பட்டது என்கிறார் இளம்பூரணர். கொண்டு தலைக்கழிதல் என்பது பாலையில் குறிஞ்சி மயங்கிய ஒழுக்கம்; பிரிந்தவண் இரங்கல் எனபது பாலையில் நெய்தல் மயங்கியது என்பர் நச்சினார்க்கினியர். *(17)*



## கைக்கிளைக்குரிய உரிப்பொருள்கள் (2)

**18. கலந்த பொழுதும்[1] காட்சியும்[2] அன்ன.**

**(இ-ள்)** 1.தலைவியைக் கண்ட நிலையில் தலைவன் மனமகிழ்ச்சி அடைந்து அவள் உள்ளக் குறிப்பினை அறியும்வரை பல செயல்களில் ஈடுபடுதல் 2. தலைவன் தலைவியைத் தனியிடத்துக் காணுதல் என்பன இரண்டாகும். இவ்விரண்டும் மேற்கூறப்பட்டவற்றைப் போல் பிறவகையில் அமையும் உரிப்பொருள்களாகும்.

**விளக்கம் :** காட்சி - தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் காணுதல்.
கலந்த பொழுது - ஒருவர் மற்றவரின் மனக்குறிப்பினை அறிந்து கொள்வதற்கு முயலும் பொது நிலைகள்.

ஒருவன் ஒருத்தியைக் கண்டவுடன் காதல் தோன்றுதலும் உண்டு; தோன்றாமையும் உண்டு. எனவே காட்சி என்பது பொதுவானதாகும். காதற்குறிப்பு இல்லாவிட்டால் **ஐயம், துணிவு, குறிப்பறிதல்** ஆகிய மனநிகழ்ச்சிகள் ஒருவரிடமே அமையும். எனவே இவை குறிஞ்சிக்குரிய உரிப்பொருளாவதில்லை. இவற்றால் காட்சி, கலந்த பொழுது ஆகிய இரண்டும் புணர்தல் நிமித்தத்திற்கு மாறானவையாய்க் கைக்கிளைக்கு உரியவையாய் வேறு கூறப்பட்டன என்கிறார் இளம்பூரணர். *(18)*

## முதற்பொருளின் வகைகள் (2)

**19. முதல்எனப் படுவது ஆஇரு வகைத்தே.**

**(இ-ள்)** அகத்திணைக்குரிய பொருள்கள் மூன்றாகும். அவற்றுள் முதற்பொருள் என்பது **நிலம், காலம்** என்னும் இரண்டு வகையினை மட்டும் உடையது. பின்னர்ப் புணர்தல் முதல் காட்சி ஈறாகக் கூறப்பட்டவை அனைத்தும் உரிப்பொருள்களாகும். *(19)*

## கருப்பொருள்கள் (8+2 =10)

**20. தெய்வம்[1] உணாவே[2] மா[3]மரம்[4] புள்[5]பறை[6]
செய்தி[7] யாழின் பகுதி[8]யொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப.**

Scanned with CamScanner

# 2. புறத்திணையியல்

தமிழ்மனிதன் ஒருவனின் கல்வி, ஈகை, புகழ், வீரம் போன்றவற்றைப் பிறருக்குப் புரியும்படியாகப் பெயரைக் கூறி எடுத்துரைப்பது புறப்பொருளாகும். பலரும் அறிந்து மகிழும்படி ஒருவனின் பண்புகளைக் கூறுவதால் புறம் என்பது காரணப் பெயராகும். ஒரு மனிதனின் பொதுவாழ்வியலைப் பற்றி எடுத்துரைத்துப் பகிர்ந்துகொள்ளும்படியாக அமைவதனைத் தமிழ் முன்னோர் புறம் எனச் சிறப்பித்தனர். பண்டைத் தமிழரின் போர் வாழ்க்கையையும் புகழ் வாழ்க்கையையும் விளக்குமுறப் பேசும் இப்புறத்திணையியல் 30 நூற்பாக்களைக் கொண்டது. இவ்வியல்,

1. (அ) வெட்சித் திணை
   (ஆ) வெட்சித் திணையின் பகுதியாகிய கரந்தைத் திணை
2. வஞ்சித் திணை
3. உழிஞைத் திணை
4. தும்பைத் திணை
5. வாகைத் திணை
6. காஞ்சித் திணை
7. பாடாண் திணை

ஆகியவற்றை நிரல்பட உரிய நிகழ்ச்சிகளோடு எடுத்துரைக்கிறது.

### வெட்சித் திணை

**59.** **அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**
**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
**உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே.**

**(இ-ள்)** அகத்திணையின் இயல்பினை மயக்கம் நீங்கும்படி தெளிவுறக் கற்றோர் அவ்வகத்திணையின் மரபினை நன்கு உணர்ந்தோர் ஆவர். அவர் தமக்கு நன்கு வகுத்துக் கூறப்படுவது புறத்திணை இலக்கணமாகும். புறத்திணையின் முதற்கூறாக நிற்பது **வெட்சி**. அது **குறிஞ்சி** என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைவது. இவ்வெட்சித் திணை பகைவர்க்கு அச்சம் தரக்கூடிய 14 துறைகளைக் கொண்டதாகும்.

**வெட்சித்திணை - விளக்கம்** : மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி. அதற்குப் புணர்தல் புணர்தல் நிமித்தம் என்பவை உரிப்பொருள்கள். அக்குறிஞ்சி நிலப்பரப்பில் **பசுக்கூட்டமாகிய ஆநிரையைக்** கவர்தலாகிய செயல் நடைபெறும். இதுவே வெட்சித் திணையாகும்.



### வெட்சி குறிஞ்சிக்குப் புறனாதல்

ஆநிரையைக் கவரச் சூடும் வெட்சிப்பூ குறிஞ்சி நிலத்திற்கு உரியது. ஆநிரை கவர்தலாகிய செயல் குறிஞ்சி நிலத்தில் நடைபெறுவது. குறிஞ்சிநில மக்கள் பிற இடங்களுக்குச் சென்று ஆநிரையைக் கவர்தலும் உண்டு. குறிஞ்சிநிலத் தலைவன் தலைவியர் பிறர் அறியாதபடி களவு வாழ்க்கையை மேற்கொள்வர். அதனைப் போல அந்நில மறவர் பிறர் அறியாதபடி களவின்வழிப் பகைவரின் ஆநிரைகளைக் கவர்வர். ஆகையால் குறிஞ்சிக்கு வெட்சி புறனாக அமைந்தது. (1)

### வெட்சித் திணையின் இலக்கணம்

**60.** **வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.**

**(இ-ள்)** வேந்தனால் ஏவிவிடப்பட்ட படைமறவர் வேற்றுநாட்டிற்குச் செல்வர். பிறர் அறியாதபடி அங்குள்ள ஆநிரைகளைக் களவினால் கவர்ந்து வருவர். அவற்றை உரிமையுடையோர் மீட்டுச் செல்லாதபடி பாதுகாப்பர். இவ்வாறு செய்யும் செயலே வெட்சித் திணையாகும்.

**விளக்கம் :** நான்கு வருணத்தாரிலும் மேம்பட்டவர் அரசர். பிறரை வென்று திறைப்பொருள் பெற்று மேம்பட்டு வாழும் செயல் அரசருக்கு மிகுந்த சிறப்பையும் மதிப்பையும் தருவதாகும். போர் செய்வதற்குரிய செயல்களுள் தொடக்கமாக அமைவது ஆநிரை கவர்தலாகும். எனவே தான் போர் தொடுத்தலின் அறிவிப்பாக விளங்கும் வெட்சித்திணை தொல்காப்பியரால் முதலில் கூறப்பட்டது.

> **தன்னுறு தொழிலே வேந்துறு தொழில்என்று**
> **அன்ன இருவகைத்தே வெட்சி**

என்பது பன்னிருபடலம். இதனை அடியொட்டியே புறப்பொருள் வெண்பாமாலையும் வெட்சியைத் தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என இரண்டாகப் பகுத்துக் கூறுகிறது. வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய திணைகளின் துறைகள் பலவும் அரசனின் ஏவலால் மட்டுமே நடைபெறுவன. அப்படி இருக்க வெட்சித்திணை, வேந்தனைத் தவிர்த்தும் நடைபெறும் என்பது பொருத்தமற்றது. மறவர் தாமே ஆநிரையைக் கவர்வது அரசனின் ஆணையை மீறிய செயலாகும். இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியர் மன்னுறு தொழிலை மட்டுமே எடுத்துரைக்கிறார்.

இதிலிருந்து மன்னுறு தொழில், தன்னுறு தொழில் என்னும் இரண்டைக் கூறும் பன்னிருபடலத்தின் வெட்சித் திணை தொல்காப்பியரால் எழுதப்படவில்லை என்பது இளம்பூரணரின் துணிபாகும். (2)

Scanned with CamScanner

எம்கண் மலர எயில்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்தூங்கக் - கொங்(கு)அலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி. (பு.வெ.மாலை. உழிஞை.24)

11.**வென்ற வாளின் மண் (மண்ணுமங்கலம்):** வெற்றிக்குக் காரணமான வீர வாளை உழிஞையார் நீராட்டுதல். (எ-டு)

தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான் - போர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அறையப் புகழ். (பு.வெ.மாலை. உழிஞை.23)

12.**தொகைநிலை:** பகைவரின் மதிலைக் கைப்பற்றியதைக் கண்ட அரசர் பலரும் ஒருசேரக் கூடிவந்து வெற்றி பெற்ற உழிஞை மன்னனிடம் தஞ்சம் அடைதல்.

இப்பன்னிரண்டு துறைகளும் உழிஞைத் திணைக்கு உரியவை. (11)

## தும்பைத் திணையின் இலக்கணம்

70. **தும்பை தானே நெய்தலது புறனே**
**மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.**

**(இ-ள்)** தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாகும். **தன் வலிமையை** உலகத்தோர் அறிய வேண்டும் என்பதற்காக ஓர் அரசன் போர் செய்ய வருவான். அவனை மற்றொரு வலிமை கொண்ட அரசன் எதிர்த்துப் போரிட்டு வீழ்த்துவான். இவ்வாறு படைத்தலைமையினை அழிக்கும் தனித் சிறப்புடையது இத்தும்பைத் திணை என்று இலக்கணம் அறிந்தோ கூறுவர்.

### தும்பை நெய்தலுக்குப் புறனாதல்

வலிமை கொண்ட பெருவேந்தர் இருவரும் ஒரு போர்க்களத்தி பெரும்படை கொண்டு போர் செய்வர். இதற்குக் காடு, மலை, வய ஆகியவை பொருத்தப்படுவதில்லை. களர் நிலமும் மணலும் கலந் பெருமணற் பரப்பே போர்க்களத்திற்கு வேண்டும். அது கடல் சார்ந் நெய்தல் நிலமாகும். எற்பாடாகிய சிறுபொழுதில் போர் முடிவுபெறும் எனவே நெய்தலுக்குத் தும்பை புறனாயிற்று என்கிறார் இளம்பூரணர்.

பெரும்பொழுது பகுக்கப்படாமை; அழுது புலம்பலாகி இரக்கம் தலைமகட்கும் கணவனை இழந்தார்க்கும் அரு உடையார்க்கும் பொருந்திவருதல் ஆகிய காரணங்களால் நெய்தலுக்கு தும்பை புறனாயிற்று என்கிறார் நச்சினார்க்கினியர். (12)



## தும்பைத் திணையின் சிறப்பியல்பு

71. **கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்**
**சென்ற உயிரின் நின்ற யாக்கை**
**இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு**
**இருபாற் பட்ட ஒருசிறப்பு இன்றே.**

**(இ-ள்)** தும்பை மறவர் அம்பு, வேல் போன்ற படைக்கருவிகளைக் கொண்டு போர்செய்வர். அவை அடுத்தடுத்துப் பாய்ந்து மறவனின் உடலிலிருந்து உயிரைப் போக்கின. அவ்உயிர் நீங்கிய மறவனின் உடல் நிலத்தில் விழாதபடி உடலில் புகுந்திருந்த அம்பும் வேலும் தாங்கிப் பிடித்தன. அந்நிலையிலும் மறவனின் உடல் முன்பிருந்த உணர்வால் துடிதுடித்தது. இச்செயல் இரண்டாக வெட்டப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்ட நீரில் வாழும் அட்டையின் துடிப்பினை ஒத்திருந்தது. இவ்வாறு இருவேறுபட்ட மறவர்களும் வலிமையுடன் போர்செய்யும் ஒருதிறத்தைச் சிறப்புற விளக்குவது தும்பைத் திணையாகும். (13)

## தும்பைத் திணையின் துறைகள் (12)

72. **தானை[1] யானை[2] குதிரை[3] என்ற**
**நோனார் உட்கும் மூவகை நிலையும்**
**வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்**
**தான்மீண்டு எறிந்த தார்நிலை[4] அன்றியும்**
**இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்[5]**
**ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்**
**கூழை தாங்கிய பெருமையும்[6] படைஅறுத்துப்**
**பாழி கொள்ளும் ஏமத் தானும்[7]**
**களிறுஎறிந்து எதிர்ந்தோர் பாடும்[8] களிற்றொடு**
**பட்ட வேந்தனை அட்ட வேந்தன்**
**வாளோர் ஆடும் அமலையும்[9] வாள்வாய்த்து**
**இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்**
**ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்[10]**
**செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ**
**ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்[11]**
**பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்**
**ஒள்வாள் வீசிய நூழிலும்[12] உளப்படப்**
**புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.**

**(இ-ள்)** பகைவருக்கு அச்சத்தைத் தரும் காலாட்படை முதலாக நூழில் ஈறாகப் பொருந்தித் தோன்றுகின்ற பன்னிரண்டு துறைகளும் தும்பைத் திணைக்கு உரியவையாகும்.

Scanned with CamScanner

மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே (நற்றிணை.362)

இது உன் உறவினர் உன்னைத் தேடி வருவர் எனத் தலைவன் தலைவியிடம் கூறுவதற்குரிய பாடலாகும். இவையனைத்தும் காதல் வாழ்க்கையின் ஒரு பகுதியாகிய உடன்போக்கில் அமையும் தலைவனின் கூற்றிற்குரிய சூழல்களாகும்.

**II. பொருள் தேடலில் தலைவனுக்கு நிகழும் கூற்றுகள்**

**7.நாளது சின்மை:** பொருள் தேடுவதற்காகப் பிரிந்து செல்லும் தலைவன் யாக்கை நிலையில்லாமல் அழியக் கூடியது எனக் கூறுதல்.

**8.இளமையது அருமை:**பெறுதற்கரிய இளமை நிலையற்றது என உணர்தல்.

**9.தாளாண் பக்கம்:** பொருளீட்டும் முயற்சி பெரிய வருத்தத்தைத் தரும் என்றல்.

**10. தகுதியது அமைதி:** அழியும் பொருள்மீது அளவுகடந்து ஆசை கொள்ளுதல் அறிவுடையோர் செயலன்று என்று கூறுதல்.

**11. இன்மையது இளிவு:** பொருள் இல்லாமையால் எல்லோராலும் இகழப்படுவது விதி எனக் கூறுதல்.

**12. உடைமையது உயர்ச்சி:** போதும் என்கின்ற மனம் வேண்டும் எனக் கூறுதல்.

**13.அன்பினது அகலம்:**பொருளைவிட உறவினர்மீது கொண்ட காதலே சிறந்தது என்றல்.

**14.அகற்சியது அருமை:** உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்து போதல் இயலாது என்று கூறுதல் ஆகியவற்றை ஏற்கக் கூடாது. இக்கூற்றுகளை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்னும் ஊக்கம் தோன்றியநிலைகளில் தலைவனுக்குக் கூற்று நிகழும். **பொருள் தேடுவோர்க்கு இத்தன்மைகள் மிகவும் இன்றியமையாதவை என்கிறார் இளம்பூரணர்.**

**III . கற்பில் தலைவனுக்கு நிகழும் கூற்றுகள்**

**15.ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு ஊதியம் கருதிய ஒருதிறம்:** குடும்ப வாழ்க்கையாகிய கற்புக் காலத்தில் தலைவியை விட்டுத் தலைவன் கல்வி கற்பதற்காகவும் படைக்கலப் பயிற்சி, சிற்பப் பயிற்சிக்களுக்காகவும் பிரிந்து செல்வான் இவை உயிர்க்கு உறுதியாகிய மறுமைப் பயனைத் தருகின்ற அறத்தின் காரணமாகப் பிரியும் பிரிவுகள். இப்பிரிவுகளிலும் தலைவனுக்குக் கூற்றுத் தோன்றும். **(எ-டு)**

அறனும் ஈகையும் அன்பும் கிளையும்
புகழும் இன்பும் தருதலின் புறம்பெயர்ந்து

Scanned with CamScanner

**நீத்த கணவன் தீர்த்த வேலின்**
**பெயர்த்த மனைவி ஆஞ்சி யானும்[8]**
**நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி**
**மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்[9]**
**முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான்**
**தலையொடு முடிந்த நிலை[10]யொடு தொகைஇ**
**ஈரைந்து ஆகும் என்ப பேரிசை**
**மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்**
**மாய்ந்த பூசல் மயக்கத் தானும்[11]**
**தாமே எய்திய தாங்கரும் பையுளும்[12]**
**கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்**
**செல்வோர் செப்பிய மூதா னந்தமும்[13]**
**நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து**
**தனிமகள் புலம்பிய முதுபா லையும்[14]**
**கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ**
**ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்[15]**
**காதலி இழந்த தபுதார நிலையும்[16]**
**காதலன் இழந்த தாபத நிலையும்[17]**
**நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்**
**சொல்லிடை இட்ட மாலை நிலையும்[18]**
**அரும்பெரும் சிறப்பின் புதல்வன் பயந்த**
**தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்[19]**
**மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்**
**பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு[20]**
**நிறையரும் சிறப்பின் துறைஇரண்டு உடைத்தே.**

**(இ-ள்)** *மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை முதலாகக் காடு வாழ்த்து ஈறாக அமைந்த இருபது துறைகளும் ஈடில்லாத அரிய சிறப்பினை உடைய காஞ்சித் திணைக்கு உரியனவாகும்.*

இவ்விருபது துறைகளையும் ஆண்பாற் துறை, பெண்பாற் துறை என்னும் இரண்டு துறையினை உடையவை என்று நச்சினார்க்கினியர் எடுத்துரைக்கிறார். ஆயினும் இளம்பூரணர் முற்கூறிய பத்தும் ஒருவகை; பிற்கூறிய பத்தும் மற்றொரு வகை எனக் குறிப்பிடுகிறார். மேலும் இத்துறைகளைச்,

1.சொல்லுவதற்கு அரிய சிறப்பினை உடையவை முதற்பத்துத்துறைகள் என்றும்

2.பெருந்துயரத்தை எடுத்துக்காட்டுபவை பின்னர் அமைந்த பத்துத் துறைகள் என்றும் கூறுவர்.



**1.சொல்லுவதற்கரிய சிறப்பிற்குரியவை (10)**

**1. மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை:** எவ்வகையிலும் எவராலும் தடுக்க முடியாத கூற்றுவன் (எமன்) உயிரைக் கவர்ந்து செல்வான் என எடுத்துரைப்பது **பெருங்காஞ்சி.**

**2.**கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய **முதுமை:** நிலையில்லாத வாழ்வின் இயல்பினைப் பட்டறிந்த சான்றோர் அப்பட்டறிவில்லாத இளைஞர்க்குக் கூறுவது **முதுகாஞ்சி. (எ-டு)**

பல்சான் றீரே பல்சான் றீரே
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனில் மூப்பின் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே. (புறநானூறு. 195)

**3.** பண்புற வரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் **மறம் :** இயல்பாய் அமைந்த மற உணர்ச்சியால் வரும்புகழைக் கருதித் தன் புண்ணைத் தானே கிழித்துக் கொண்டு உயிரைவிடுவது **மறக்காஞ்சி. (எ-டு)**

நகைஅமர் ஆயம் நடுங்க நடுங்கான்
தொகைஅமர் ஓட்டிய துப்பின் - பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலான்
பொங்கிப் பரிந்திட்டான் புண். (பு.வெ.மாலை.காஞ்சி. 12)

4. ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன் பேஎய் ஓம்பிய **பேஎய்ப் பக்கம்:** பேணிப் பாதுகாக்கும் உறவினர் அருகில் இல்லாமல் புண்பட்டுத் துன்பமுறுகிறான் மறவன். அம்மறவனைப் பேய் பாதுகாப்பது **பேய்க்காஞ்சியாகும். (எ-டு)**

ஆயும் அடுதிறலாற்(கு) அன்பிலார் இல்போலும்!
தோயும் கதழ்குருதி தோள்புடைப்பப் - பேயும்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம்புகல ஓம்பல் உறும். (பு.வெ.மாலை.காஞ்சி. 13)

5. இன்னன் என்று இரங்கிய **மன்னை:** இத்தகைய பேராற்றல் வாய்ந்தவன் என இறந்த வீரனின் சிறப்பை உலகத்தார் கூறி வருந்துவது **மன்னைக் காஞ்சி** ஆகும்.

Scanned with CamScanner

## ஓதல், தூது பிரிவுகளுக்கு உரியவர் (2)

28. **அவற்றுள்
ஓதலும்[1] தூதும்[2] உயர்ந்தோர் மேன.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட பிரிவுகளுள் 1.ஓதற்பிரிவும் 2.தூதிற் பிரிவும் நால்வகை வருணத்தாருள் முதலில் நிறுத்தப்பட்ட அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியவை ஆகும். இவை இரண்டும் அடங்கும்.

உயர்வு என்பது ஒழுக்கம், கல்வி, குணம், செல்வம் ஆகியவற்றால் அமைவதாகும். அத்தன்மை பெற்றவருக்கு இப்பிரிவுகள் உரியன. **(எ-டு)**

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே (புறநானூறு.305)

என்பது பார்ப்பார் தூது சென்றதைக் குறிப்பிடுகிறது. அரசர் தூதாகச் சென்றதைப்,

படர்ந்துஆ ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே (சிலம்பு.17:36)

என இளங்கோவடிகள் கண்ணன் தூதின்வழிக் காட்டுகிறார். *(28)*

## பகைவயிற் பிரிவு (2)

29. **தானே சேறலும்[1] தன்னொடு சிவணி
ஏனோர் சேறலும்[2] வேந்தன் மேற்றே.**

**(இ-ள்)** பகை காரணமாகப் பிரியும் பிரிவு பகைவயிற் பிரிவாகும். அப்பிரிவில் 1.அரசன் படையெடுத்துத் தானே செல்லுதலும் உண்டு 2.தன்னோடு நட்புக் கொண்ட பிறரை அழைத்துச் செல்லுதலும் உண்டு.

அரசன் தானே தலைமை ஏற்றுச் செல்வது **பகை தணிவினைப் பிரிவாகும்**. பிறர் தலைமையின்கீழ் அரசர்களோடு சேர்ந்து செல்லுதல் **வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவாகும்** என்கிறார் இளம்பூரணர். *(29)*

## காவற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு

30. **மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்[1]
இழைத்த ஒண்பொருள்[2] முடியவும் பிரிவே.**

அ. மோனிஷா
எம்.ஏ தமிழ்.



**(இ-ள்)** முல்லை முதலான திணை நிலங்களில் பொருந்தியிருப்பவை மக்கள் அல்லாத சிறப்பை உடைய தெய்வங்கள் ஆகும். 1.அத்தெய்வங்களுக்குச் சிலை வைத்து நடத்தும் பூசை, விழா போன்ற நிகழ்ச்சிகள் உரிய முறையில் சிறப்புற நடைபெறுதல்; அந்நால்வகை நிலங்களிலும் நெறிதவறும் மக்களைத் திருத்தி நெறிப்படுத்துதல் ஆகியவற்றிற்காகப் பிரிதல் 2.இல்லறக் கடமைகளை ஆற்றுவதற்காக மேன்மைமிக்க பெரும்பொருளை ஈட்டச் செல்லுதல் ஆகிய இரண்டும் பிரிவிற்குரிய காரணங்களாகும்.

**விளக்கம் :** தெய்வம் சார்ந்த நிகழ்ச்சிகள், மக்களை அறவழியில் நிறுத்துதல் ஆகியவற்றிற்குப் பிரியும் பிரிவு **நாடுகாவல்** அல்லது **அறப்புறங் காவலாகும்.** பொருளீட்டச் செல்வது **பொருள்வயிற் பிரிவாகும். (எ-டு)**

கைதொழு மரபின் கடவுள் சான்ற
செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின் (அகநானூறு.125) :-

என்பது மேலோர் முறைமைக்காகப் பிரியும் பிரிவு. சேரன் செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்வதற்குப் பிரிந்த பிரிவைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. *(30)*

## அறப்புறங் காவலுக்கு உரியோர்

31. **மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே.**

**(இ-ள்)** தெய்வச் சார்புடைய நிகழ்ச்சிகளைச் செவ்வனே நடத்தி வைப்பதற்காகப் பிரிவது அறப்புறங் காவலாகும். இது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வகை வருணத்தாருக்கும் உரியது. *(31)*

## நாடு காவலுக்கு உரியோர்

32. **மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.**

**(இ-ள்)** அரசனுக்கு உரியது காவல் தொழிலாகும். அது அரசனுக்குப் பின்னர் வரிசைப்படுத்தப்பட்ட வணிகர், வேளாளர் என்னும் வருணத்தாருக்குப் பொருந்தி வருவதும் உண்டு.

**விளக்கம் :** நாட்டை ஆட்சி செய்யும் உரிமை மன்னனுக்கு மட்டுமே உண்டு. அரசனின் கட்டளைக்கு இணங்க வணிகரும் வேளாளரும் அக்காவல் தொழில் செய்யும் உரிமையைப் பெறுவர்.

தேரோட்டியான **கருணன் துரியோதனின்** கட்டளைக்கு இணங்கி அங்க நாட்டு அரச உரிமையைப் பெற்றது ஈண்டு ஒப்பிட்டு அறியத் தக்கதாகும். *(32)*

Scanned with CamScanner

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய் (குறள்.424)
நுண்பொருள் காண்பது அறிவு.

இது கற்பித்தலை உணர்த்துவது.

**2.ஐவகை மரபின் அரசர் பக்கம்:** அரசரின் மேம்பாட்டிற்குரிய ஒழுக்கங்கள் ஐந்து. அவை 1.ஓதல் 2.வேட்டல் 3.ஈதல் 4.படைக் கருவிகளை வழங்குதல் 5.குடியோம்புதல் என்பனவாகும்.

**3.(அ) இருமூன்று மரபின் ஏனோர் (வணிகர்) பக்கம்:** வணிகரின் மேம்பாட்டிற்குரிய ஒழுக்கங்கள் ஆறு. அவை 1.ஓதல் 2.வேட்டல் 3.ஈதல் 4.உழவு 5.வாணிகம் 6.நிரையோம்பல் (ஆநிரையைப் பாதுகாத்தல்) என்பனவாகும். **(எ–டு)**

உழுது பயன்கொண்(டு) ஒலிநிரை ஓம்பிப்
பழுதுஇலாப் பண்டம் பகர்ந்து – முழு(து)உணர
ஓதி அழல்வழிபட்(டு) ஓம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க்(கு) அரசு. (பு.வெ.மாலை. வாகை.9)

**(ஆ) இருமூன்று மரபின் ஏனோர் (வேளாளர்) பக்கம்:** வேளாளரின் மேம்பாட்டிற்குரிய ஒழுக்கங்கள் ஆறு. அவை 1.உழவு 2.உழவு ஒழிந்த தொழில் 3.விருந்தோம்பல் 4.பகடு புறந்தருதல் (ஆநிரை காத்தல்) 5.வழிபாடு 6.வேதம் அல்லாக் கல்வி என்பனவாகும். **(எ–டு)**

உழவு :

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (குறள்.1031)

வழிபாடு :

இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோடு இன்ன – குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார் கயவரோடு
ஒன்றா உணரற்பாற் றன்று (நாலடியார்.143)

4. மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய **அறிவன் தேயம்:** குற்றமற்ற செயலை உடையவை மழை, பனி, வெயில் என்னும் மூன்று காலங்களாகும். அவற்றைத் தன்நெறியினால் திரிபின்றி உணரும் சோதிடனாகிய கணியனின் திறத்தைச் சிறப்பித்துக் கூறுதல். (கணியன் - எப்போதும் வானத்தில் உள்ள கோள்நிலையைக் கணித்துக் கூறுபவன்).

புரிவின்றி யாக்கைபோல் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங்கு அறியத் – திரிவின்றி
விண்இவ் உலகம் விளைக்கும் விளை(வு)எல்லாம்
கண்ணி உரைப்பான் கணி. (பு.வெ.மாலை. வாகை.19)



**5.நால்இரு வழக்கின் தாபதப் பக்கம்:** தவம் செய்வோரின் (முனிவரின்) மேம்பாட்டிற்குரிய ஒழுக்கங்கள் எட்டு. அவை 1.நீராடுதல் 2.நிலத்தில் படுத்திருத்தல் 3.தோலாடை உடுத்தல் 4.சடையை வளர்த்தல் 5.தீ வளர்த்தல் 6.ஊருக்குள் செல்லாமை 7.காட்டில் கிடைக்கும் உணவை உண்ணுதல் 8.தெய்வப் பூசை செய்தல் என்பனவாகும். **(எ–டு)**

நீர்பலகால் மூழ்கி நிலத்(து)அசைஇத் தோல்உடையாச்
சோர்சடை தாழச் சுடர்ஓம்பி – ஊர்அடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி. (பு.வெ.மாலை. வாகை.13)

**6.பாலறி மரபின் பொருநர்:** பாகுபாட்டு இயல்பின் மரபினை முறையாக அறிந்த பொருநரின் மேம்பாட்டினைக் கூறுதல். (பொருநர் - வாளாலும் தோளாலும் பகைவருடன் போரிடுதல், வெற்றியை எடுத்துக் கூறுதல் என்னும் பாகுபாடுகளை அறிந்த மரபினை உடையவர் ஆவர்). **(எ–டு)**

ஏந்துவாள் தானை இரிய உறைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து – வேந்தர்
இருங்களி யானை இனம்இரிந்(து) ஓடக்
கருங்கழலான் கொண்டான் களம். (பு.வெ.மாலை. வாகை. 24)

**7.அனைநிலை வகை:** மேற்கூறப்பட்டவற்றை ஒத்தவையாகிய 1.சொல்லாற்றல் 2.பாடல் பாடுதல் 3.கூத்து இயற்றுதல் 4.சூதாடுதல் 5.ஆட்டுக்கிடாப் போர் 6. பறவைப் போர் போன்றவற்றால் மேம்பாடு தோன்ற நிற்பனவும் வாகைத் திணையாகும்.

இவ்வாறு மேற்கூறப்பட்டவர்கள் ஒழுக்கங்களில் முதன்மை பெற்று விளங்கும் தன்மையைத் தொல்காப்பியர் வாகை என வகைப்பாடு செய்து காட்டுகிறார். *(16)*

## வாகைத் திணையின் துறைகள் (18)

75 **கூதிர் வேனில் என்றுஇரு பாசறைக்**
**காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்[1]**
**ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியும்[2] தேரோர்**
**வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்[3]**
**ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்[4]**
**பெரும்பகை தாங்கும் வேலி னானும்[5]**
**அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்[6]**
**புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்[7]**
**ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்**
**சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத்**
**தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்[8]**

### ஓதற்பிரிவு - வணிகர்

**33. உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தி னான.**

**(இ-ள்)** அரசனின் பின்னோராக விளங்குபவர் வணிகரும் வேளாளரும் ஆவர். அவ்விருவருள் உயர்ந்தோராக மதிக்கப்படுபவர் வணிகர். அவ்வணிகருக்கு ஓதுதல் காரணமாகப் பிரியும் பிரிவு உரியதாகும். அரசர், அந்தணர்க்குரிய ஓதற் பிரிவு வணிகருக்கும் பொருந்தி வரும். (33)

### வணிகர், வேளாளர் தூது செல்லுதல்

**34. வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்துஇடன் உடைத்தே.**

**(இ-ள்)** வேந்தருக்குரியது தூது போகும் தொழிலாகும். அத்தொழில் அவ்வேந்தனை ஒழிந்த வணிகர், வேளாளர் ஆகியோர் மேற்கொள்ளும் நிலையும் உண்டு.

வணிகர், வேளாளர் ஆகியோர் அமைச்சர் ஆக்கப்படும் நிலையில் தூது போகும் தொழிலுக்கு உரியவர் ஆவர். பாணர் குலத்தைச் சார்ந்த ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றதைப் புறநானூறு (பா.95) எடுத்துரைக்கிறது. (34)

### பொருள்வயிற் பிரிவு - வணிகர், வேளாளர்

**35. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே.**

**(இ-ள்)** பொருள் தேடுவதற்காக மேற்கொள்ளப்படும் பிரிவு பொருள்வயிற் பிரிவாகும். இது வணிகர், வேளாளர் என்னும் இருதிறத்தார்க்கும் உரியதாகும். (35)

### பொருள்வயிற் பிரிவு – அந்தணர்

**36. உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான.**

**(இ-ள்)** நால்வகை வருணத்தாருள் உயர்ந்தோராக விளங்குபவர் அந்தணர். அவர்கள் ஒழுக்கத்தை முன்வைத்தே பொருள்வயிற் பிரிவினை மேற்கொள்வர்.

**விளக்கம் :** வணிகரும் வேளாளரும் வணிகத்தொழில் முதலியவற்றால் பொருள் சேர்ப்பர். ஆனால் அந்தணர்கள் அவ்வாறு செய்யாமல் இயற்கைஒழுக்கம், செயற்கைஒழுக்கம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்துப் பொருளீட்டுவர்.

இயற்கை ஒழுக்கம் - குடும்பத்திற்குரிய சடங்குகள் (ஆசாரங்கள்)
செயற்கை ஒழுக்கம் - கல்வி. (36)



### கலத்தில் பிரியும் முறை

**37. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை.**

**(இ-ள்)** மரக்கலங்களைத் துணையாகக் கொண்டு கடல்கடந்து பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்வர். அந்நிலையில் தலைவியை உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை.

**விளக்கம் :** முந்நீர் (கடல்) - ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்.

நடந்தும் ஊர்திகளில் ஏறியும் நிலத்தின்வழிச் செல்வது காலிற் பிரிவாகும். கப்பல் ஏறிக் கடல்கடந்து செல்வது நீர்வழிப் பிரிவாகும். இது கலத்திற் பிரிவு என்றும் கூறப்படும். **(எ-டு)**

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்ளெரி மருங்கறிந்து ஒய்ய
ஆள்வினைப் **பிரிந்த காதலர்** (அகநானூறு. 255)

இது கலத்திற் பிரிவில் தலைவன் தலைவியை விட்டுத் தனியே பிரிந்தமைக்குரிய சான்றாகும். காலிற் (தரைவழிப்) பிரிவில் மட்டும் தலைவியைத் தலைவன் உடன் அழைத்துச் செல்லுதலும் உண்டு.

பொருள்வயிற் பிரிவில் **கோவலன் கண்ணகியை** உடன் அழைத்துச் சென்றது **காலிற் பிரிவாகும்.**

முந்நீர்: ஓதல், தூது, பொருள் ஆகிய மூன்று வகையால் பிரியும் பிரிவு என்கிறார் நச்சினார்க்கினியர். (37)

### பெண்கள் மடல் ஏறுவதில்லை

**38. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான.**

**(இ-ள்)** எந்த ஒரு குலத்திலும் பெண்கள் மடலேறுதல் என்னும் வழக்கம் இல்லை. இயற்கையிலேயே அச்சம், மடம், நாணம் என்னும் பண்புகளைப் பெற்ற மகளிருக்கு அது புகழைத் தருகின்ற நெறியாகாது.

**விளக்கம் :** மடலேறுதல் - காதலை வெளிப்படையாகக் காட்டுதல். மகளிர்க்கு மடலேறும் வழக்கம் இல்லை என்பதை வள்ளுவரும்,

கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணின் பெருந்தக்க தில். (குறள். 1137)

எனக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து ஆடவர் மடலேறுவர் என்பது புலனாகிறது.

Scanned with CamScanner

(எ-டு)

............
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறல் அறியா ஏமக் காப்பினை
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே. (புறநானூறு.20)

என்பது புள் பற்றிய நிமித்தமாகும்.

........
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின். (புறநானூறு.145)

என்பது ஓம்படை பற்றியது.

இவ்வாறு வருவன அனைத்தும் பாடாண் திணைக்குரிய துறைகளாகும். (30)

Scanned with CamScanner

**(இ-ள்)** 1.கடுங்குளிர் (**கூதிர்**) காலமாகிய பெரும்பொழுதும் **2.யாமமாகிய** சிறுபொழுதும் குறிஞ்சித் திணைக்குரிய பொழுதுகளாகும் என்று சொல்லுவர் புலவர்.

கூதிர் - ஐப்பசி, கார்த்திகை.

யாமம் (நள்ளிரவு) - இரவின் நடுக்கூறு (இரவு 10.00 - 2.00). (7)

**குறிஞ்சித் திணை - துணைப்பொழுது**

8. **பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட **குறிஞ்சித்** திணைக்கு **முன்பனிக்** காலமும் பெரும்பொழுதாகும் என்று சொல்லுவர் புலவர்.

முன்பனிக்காலம் - மார்கழி, தை.

கூதிர்காலம் போல அத்துணைச் சிறப்பில்லாததால் முன்பனிக்காலம் தனியே பிரித்துக் கூறப்பட்டது. (8)

**மருதத் திணைக்குரிய சிறுபொழுதுகள் (2)**

9. **வைகறை[1] விடியல்[2] மருதம்.**

**(இ-ள்)** 1.வைகறை 2.விடியல் என்பன சிறுபொழுதுகள். இவை இரண்டும் மருதத்திணைக்கு உரியவை.

வைகறை - நடு இரவின் பிற்கூறு - விடியலுக்கு முன் (அதிகாலை 2.00 -6.00)

விடியல் - பகற்பொழுதின் முற்கூறு - (காலை 6.00 - 10.00)

பெரும்பொழுது இன்னதெனச் சுட்டிக் கூறாமையால் மருதத்திற்கு ஆறுவகைப் பெரும்பொழுதுகளும் உரியவை. (9)

**நெய்தல் திணைக்குரிய பொழுது**

10. **எற்பாடு,**
**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.**

**(இ-ள்)** எற்பாடாகிய சிறுபொழுது **நெய்தல்** திணைக்குப் பொருண்மை பெறத் தோன்றுவதாகும்.

எற்பாடு - கதிரவன் சாயுங்காலம் - முன்னிரவு (மாலை 6.00 - இரவு 10.00)

எல் - சூரியன்; படுதல் - மறைதல்.

மருதத்திற்குக் கூறியதைப் போல **நெய்தலுக்கும் ஆறு பெரும்பொழுதுகளும்** உரியவையாகும். (10)

**பாலைத் திணைக்குரிய பொழுதுகள்**

11. **நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.**



**(இ-ள்)** நடுவுநிலைத் திணையாகக் குறிக்கப்படுவது **பாலை.** அதற்குரிய சிறுபொழுது **நண்பகல்** ஆகும். மேலும் **இளவேனில், முதுவேனில்** என்னும் இருவகைப் பெரும்பொழுதுகளோடும் ஒத்து முடிதலாகிய முறைமையினை உடையது பாலைத்திணையாகும்.

நண்பகல் - நடுப்பகல் (காலை 10.00 - மதியம் 2.00)

இளவேனில் - சித்திரை, வைகாசி ; முதுவேனில் - ஆனி, ஆடி (11)

**பாலைத் திணை - துணைப் பொழுது**

12. **பின்பனி தானும் உரித்தென மொழிப.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட **பாலைத்** திணைக்கு இளவேனில், முதுவேனில் என்னும் பெரும்பொழுதுகளோடு **பின்பனியாகிய** பெரும்பொழுதும் உரியது என்று சொல்லுவர் புலவர். பின்பனி - மாசி, பங்குனி.

**விளக்கம்** : பாலைத் திணைக்கு வேனிற் காலத்தை நோக்கப் பின்பனிக் காலம் சிறப்பில்லாதது. எனவே அதனைத் தனியே பிரித்துக் கூறினார்.

**திணைகளும் பொழுதுகளும்**

அறுவகைப் பெரும்பொழுதுகளும் சிறுபொழுதுகளும் ஐந்து திணைகளுக்கும் உரியவையாகக் காட்டப்பட்டன. அவ்வாறு கூறுவதற்கெனப் பல சிறப்புக் காரணங்கள் உண்டு. அவற்றை இளம்பூரணர் தெளிவாக விளக்குகிறார்.

வேனிற்காலத்தில் வெப்பம் மிகுதி. அதனால் காட்டில் உள்ள தாவரங்கள் காய்ந்து பொலிவிழந்து காணப்படும். அவை முழங்கும் மேகம் பெய்யும் மழையால் தளிர்த்து அழகு பெறும். அதனால் **முல்லைக்குக் கார்காலம்** சிறந்ததாயிற்று. முல்லை நிலத்திற்கு இன்றியமையாதது முல்லை மலர். அது மலரும் காலம் மாலை. அதுவே அந்நிலத்திற்குரிய ஆநிரை திரும்பி வரும் காலமாகும். முல்லை மலர்தல், ஆநிரை வருதல் ஆகியவற்றைக் கண்டு தனித்திருக்கும் தலைவிக்கு வருத்தம் மிகுதியாகும். எனவே **முல்லைக்கு மாலைக்காலம்** சிறந்ததாயிற்று.

பிறர் அறியாமல் தலைவனும் தலைவியும் கூடி மகிழும் களவு வாழ்க்கை குறிஞ்சித் திணைக்கு உரியது. களவிற்குத் தனியிடம் வேண்டும். குளிர்காலப் பகலிலும் இரவிலும் இடைவிடாது மழை தூறுவதால் பிறர் வரமாட்டார். தனிமையில் தடையின்றி இருவரும் சந்திக்கலாம். நடு இரவிலும் பிறர் தொல்லை தரமாட்டார். எனவே **குறிஞ்சிக்குக் கூதிரும் யாமமும்** சிறப்பாகக் கூறப்பட்டன.

வயல் சார்ந்த வளமான பேரூர்ப் பகுதியில் வாழ்வோர் செல்வச் சீமான்களாய்த் திகழ்வர். பரத்தையரை நாடிச் சென்ற அவர்கள் பிற அயர்ந்து உறங்கும் விடியற் காலையில் யாரும் அறியா... தம்வீட்டிற்கு வருவர்.

தொல்காப்பியர் **கைக்கிளை, பெருந்திணை** என்னும் இரண்டையும் பெயர் சுட்டி அகத்திணைகளை ஏழாகத் தொகுத்துக் காட்டுகிறார். இவற்றிற்கு இடையில் அமைந்த திணைகள் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்துமாகும். நடுவில் நிற்கும் இவை **நடுவண் ஐந்திணை** அல்லது **அன்பின் ஐந்திணை** என்றும் கூறப்படும்.

**கைக்கிளை:** கை என்பது சிறுமைப் பொருளை உணர்த்தும் இடைச்சொல். கையேடு, கைப்பிள்ளை, கைவாள் போன்ற சொற்களில் கை என்பது சிறுமை (பெருமையின்மை) என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. கை - சிறுமை; கிளை - உறவு. அதாவது பெருமை இல்லாத தலைமக்களின் உறவே கைக்கிளை என விளக்கம் தருகிறார் இளம்பூரணர்.

கை - (ஒரு) பக்கம்; கிளை - உறவு எனப் பொருள் கொண்டு ஒருமருங்கு பற்றிய காதல் (ஒருதலை வேட்கை) என்கிறார் நச்சினார்க்கினியர்.

**அன்பின் ஐந்திணை:** வடிவம், இளமை, பண்பு, செல்வம் போன்றவற்றால் ஒப்புமை உடைய தலைவன், தலைவியர் ஒருவரை ஒருவர் விரும்புவர். அன்பின் காரணமாக அவ்விருவரும் தாமே கூடிக் காதலித்தலும் பின் இல்லறம் நடத்துதலும் அன்பின் ஐந்திணையாகும்.

**பெருந்திணை:** இது அன்பின் ஐந்திணைக்கு மாறாக அமைவது; பொருந்தாத காமம் எனக் குறிக்கப்படுவது. ஒப்புமை இல்லாத தலைமக்களிடத்தில் தோன்றுவது. மனநிலை அறியாமல் இன்னார்க்கு இன்னார் எனப் பெரியோர் முடிவால் அமையும் இல்லற வாழ்க்கை. மிகுதியாகப் - பெருவழக்கமாகப் பின்பற்றப்பட்ட திருமண முறைகளால் அமைவதாலும் பெருந்திணை ஆயிற்று என்கிறார் இளம்பூரணர். (1)

## நிலம்பெறும் திணைகள் (4)

2. **அவற்றுள்**
**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்டவை ஏழ் திணைகளாகும். இடையில் இடம் பெற்றவை முல்லை முதலாகிய ஐந்து திணைகளாகும். அவற்றின் நடுவில் இடம்பெற்றிருப்பது (நடுவணது) பாலை. அது நீங்கலாக எஞ்சிய நான்கு திணைகளுக்கும் ஒலிநிறைந்த அலைகளைக் கொண்ட கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் நிலங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

**விளக்கம் :** திணைகள் ஏழாகக் கூறப்பட்டாலும் **முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்** என்னும் நான்கு திணைகளுக்கு மட்டுமே நிலப்பகுப்புகள் உண்டு. பாலைக்கெனத் தனியே நிலம் இல்லை. இக்காரணம் பற்றியே இவ்வுலகத்தை முன்னோர் **நானிலம்** (நான்கு +நிலம்) என்னும் பெயரால் குறித்தனர்.



கைக்கிளை                                                                 பெருந்திணை

**முல்லை குறிஞ்சி** **மருதம் நெய்தல்**

**பாலை**

நடுவுநிலைத்திணை - ஐந்தனுள் நடுவில் இடம்பெற்ற பாலைத் திணை. அது பிற திணைகளைப் போல நிலையான திணை ஆகாது. முல்லையும் குறிஞ்சியும் மழை பொழியாமல் காய்ந்தால் அவை பாலையாக உருமாற்றம் பெறும். இதனை இளங்கோவடிகள்,

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும். (சிலம்பு.11 : 64 -66)**

என விளக்குவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். (2)

## அகத்திணைக்குரிய பொருள்கள் (3)

3. **முதல்[1] கரு[2] உரிப்பொருள்[3] என்ற மூன்றே**
**நுவலும் காலை முறைசிறந் தனவே**
**பாடலுள் பயின்றவை நாடும் காலை.**

**(இ-ள்)** சான்றோரின் அகப்பாடல்களுள் பல பொருள்கள் இடம்பெற்றுள்ளன. நன்றாக ஆராய்ந்து பார்க்க அவை **1. முதற்பொருள் 2.கருப்பொருள் 3.உரிப்பொருள்** என்னும் மூன்றனுள் அடங்கும். இம்மூன்று பொருள்களும் இடம்பெற்ற இவ்வரிசை முறையால் சிறந்து விளங்கும் தன்மை கொண்டவை.

**விளக்கம்**

ஒரு பாடலில் மூன்று பொருள்களும் கலந்து வந்தால் முதலில் முதற்பொருளைக் கொண்டு திணையை அறியவேண்டும். கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தால் கருவிற்கு முதன்மை தர வேண்டும். உரிப்பொருள் மட்டும் வந்தால் அதனைக் கொண்டு திணையை இனம் காணவேண்டும். உயர்ந்தவர் என்பதற்கு ஒழுக்கம், கல்வி, செல்வம் போன்ற பல காரணங்கள் அமையும். அவற்றைப் போலப் பாடலில் வரும் திணைகளை அறிவதற்கு இம்மூன்று பொருள்களும் தேவை என்கிறார் இளம்பூரணர்.

முதற்பொருளைவிடக் கருவும் கருவைவிட உரியும் சிறந்தனவாகக் கொள்ளப்படும் என்கிறார் நச்சினார்க்கினியர். (3)

## முதற்பொருள் வகை (2)

4. **முதல்எனப் படுவது நிலம்[1] பொழுது[2] இரண்டின்**
**இயல்புஎன மொழிப இயல்புஉணர்ந் தோரே.**

Scanned with CamScanner

பருஞ்சமம் ததைந்த செருப்புகல் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
**பெருஞ்சோறு உகுத்தற்கு எறியும்**
கடுஞ்சினவேந் தேநின் தழங்குகுரல் முரசே. (பதிற்றுப்பத்து.30)

ாறோர் **விளக்கம்:** வெற்றி பெற்ற வஞ்சி மன்னனின் மனம்
ி அடையும்படி மறவரும் புலவரும் புகழ்ந்து கூறுதல்.
றோர் **தேய்வு:** தோற்றோரின் அழிவைக் கூறிப் பழித்துரைத்தல்.
ாறாச் சிறப்பின் **கொற்ற வள்ளை:** குறைவற்ற சிறப்பினை உடைய
மன்னருக்குத் தோற்ற மன்னன் திறை கொடுத்தல்.
ிபடை தட்டோர் **தழிஞ்சி:** பகைவரின் படைக்கருவிகளால்
புண் பட்டு நிலைகுலைந்தோரைத் தழுவிப் பாதுகாத்தல். **(எ-டு)**

வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூது ஆங்காங்கு இசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமம் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறுமிறை யாகத்
திரிந்த வாய்வாள் திருந்தாத்
தனக்குஇரிந் தானைப் பெயர்புற நகுமே. (புறநானூறு.284)

ாவாறு கூறப்பட்ட பதின்மூன்றும் வஞ்சித்திணைக்குரிய
றகளாகும். (7)

## ழிஞைத் திணையின் இலக்கணம்

**உழிஞை தானே மருதத்துப் புறனே**
**முழுமுதல் அரணம் முற்றலும்[1] கோடலும்[2]**
**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.**

**ு-ள்)** உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் கத்திணைக்குப் புறனாக அமைவதாகும். கோட்டையின் ாதுகாப்பிற்கு முழுமுதல் அரணாக விளங்குவது மதிலாகும். அதனைச் சுற்றி வளைத்தல் (முற்றுகையிடுதல்) 2.அழித்தல் என்னும் சயல்களில் உழிஞை வீரர்கள் ஈடுபடுவர். இவ்விருவகையான நறிமுறைகளையும் மரபாகக் கொண்டது உழிஞைத் திணை என்று றத்திணை இலக்கணத்தை அறிந்தோர் கூறுவர்.

**ிளக்கம் :** கோட்டைக்குரிய பாதுகாப்பு அரண்கள் மூன்றாகும். அவை .கடையரண் (காவற்காடு) 2.இடையரண் (அகழி) 3.தலையரண் (மதில்) ான்பன. அவற்றுள் பிறரால் நெருங்கமுடியாத சிறப்புகளைக் கொண்டது தலையரணாகிய மதிலாகும்.



ஓர் அரசன் இம்மதிலைப் பாதுகாப்பாகக் கொண்டே போர் செய்வான். பகையரசன் அம்மதிலை முற்றுகையிட்டுப் போர் செய்து அழிப்பான். இதுவே உழிஞைப்போர். மதில் அழியாமல் காப்பது நொச்சிப் போராகும்.

ஒரு நாட்டின் எல்லையை முழுமையாக அழிப்பது உழிஞைத் திணை. சிறிய அளவில் அழிப்பது வெட்சியுள் கூறப்பட்ட ஊர் கொலை என்னும் துறைவகைப்படும் என இவ்விரண்டற்கும் உரிய வேறுபாட்டைக் குறிப்பிடுகிறார் இளம்பூரணர்.

### உழிஞை மருதத்திற்குப் புறனாதல்

வஞ்சி வேந்தனோடு போர் செய்ய முடியாமல் தோல்வியுற்ற அரசன் அரணைப் பாதுகாப்பாகக் கொண்டு போர் செய்வான். உழிஞைப்போர் நடைபெறும் இடம் நாடாகும். அது வயல் சார்ந்த இடத்தைக் கொண்டது. உழிஞைப் போர் நடைபெறுவதற்குரிய காலம் விடியற் காலமாகும். நிலமும் சிறுபொழுதும் மருதத்திற்கு உரியவை. இவற்றால் உழிஞை மருதத்திற்குப் புறன் என்கிறார் இளம்பூரணர்.

ஊடல்கொண்ட தலைவி கதவை அடைத்துத் தலைவனைப் புறக்கணிப்பாள். அதுபோல் பகையரசனுக்குக் கோட்டை வாயிலை அடைத்தல், எல்லாப் பெரும்பொழுதுகளும் போருக்கு ஏற்ற காலமாதல் என்பவற்றால் மருதத்திற்கு உழிஞை புறன் என்கிறார் நச்சினார்க்கினியர். (8)

### உழிஞைத் திணையின் துறை வகை

67. **அதுவே தானும் இருநால் வகைத்தே.**

**(இ-ள்)** உழிஞைத் திணைக்குரிய துறைகளை வகுத்துக் கூறுகின்ற இடத்து அவை எட்டு வகைப்படும். (9)

### உழிஞைத் திணை – துறைப் பகுப்புகளின் வகைகள் (4 + 4 = 8)

68. **கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்[1]**
**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்[2]**
**தொல்எயிற்று இவர்தலும்[3] தோலது பெருக்கமும்[4]**
**அகத்தோன் செல்வமும்[5] அன்றி முரணிய**
**புறத்தோன் அணங்கிய பக்கமும்[6] திறல்பட**
**ஒருதான் மண்டிய குறுமையும்[7] உடன்றோர்**
**வருபகை பேணார் ஆர்எயில்[8] உளப்படச்**
**சொல்லப் பட்ட நால்இரு வகைத்தே.**

**(இ-ள்)** கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் முதலாக ஆர்எயில் ஈறாகக் கூறப்பட்ட எட்டும் உழிஞைத் திணையின் வகைகளாகும்.

Scanned with CamScanner

மகளிர் மடலேறுதல் என்பது தமிழருக்கு உரிய மரபன்று. அது வடநாட்டார் வழக்கமாகும். இதனைத் திருமங்கையாழ்வார்,

அன்ன நடையார் அலர்ஏச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனையாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் (பெரிய திருமடல்.20)

என்னும் தொடர்வழி விளக்குகிறார்.

தற்காலத்தில் காதலித்தவளை ஏமாற்றி வேறொருத்தியை மணமுடிக்க முயல்வான் காதலன். அந்நிலையில் தன் உண்மைக் காதலை ஊரறிய எடுத்துரைத்துச் சாதிக்கும் நிலை இன்று பெண்களிடம் மிகுதியாகக் காணப்படுகிறது. இது முற்கால மடலேறுதலின் மரபு மாற்றமாகும். (38)

## உடன்போக்கில் நற்றாய் கூற்று (8)

39. தன்னும் அவனும் அவளும் சுட்டி[1]
மன்னும் நிமித்தம்[2] மொழிப்பொருள்[3] தெய்வம்[4]
நன்மை தீமை அச்சம் சார்தல்[5] என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ[6]
முன்னிய காலம் மூன்றொடு விளக்கித்[7]
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்[8]
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.

**(இ-ள்)** தன்னையும் தலைவன் தலைவியரையும் சுட்டிக் கூறுதல் முதலாகப் புலம்பல் ஈறாகக் கூறப்பட்டவை அனைத்தும் உடன்போக்கில் நற்றாய்க்குக் கூற்று நிகழ்த்துவதற்குரிய சூழல்களாகும்.

களவு வாழ்க்கையில் கூடி மகிழ்ந்த தலைவன், தலைவியர் கற்பு வாழ்க்கைக்காக உடன்போக்கை மேற்கொள்வர். அந்நிலையில் தலைவியைப் பெற்றவளாகிய நற்றாய் 1.தன்னையும் தன்மகளை அழைத்துச் சென்ற தலைவன், அவனுடன் சென்ற தலைவி ஆகியோரையும் சுட்டிக் கூறி மனம் வருந்துவாள் 2.தொன்றுதொட்டு நிலைபெற்ற பல்லி சொல்லுதல் முதலாகிய நிமித்தம் கேட்பாள் 3.பிறர் தமக்குத் தாமே தற்செயலாகக் கூறிக்கொள்கின்ற சொற்களைத் தனக்கு ஏற்ற நற்சொற்களாக மனத்தில் கொள்வாள் 4.தெய்வம் ஏறப்பெற்ற பூசாரி (வேலன்) வெறியாடிக் கூறும் அருட்சொற்களைக் கேட்பதோடு குறி பார்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவாள் 5.இவற்றால் தனக்கும் தலைவன் தலைவியருக்கும் உண்டாகும் நன்மை, தீமை, அச்சம் ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பாள் 6.உடன்போக்குச் சென்ற தலைவன், தலைவியர் தம் வீட்டிற்குத் திரும்பி வருவார்களோ என ஏங்குவாள்



7.முன்பு அறியாத் தன்மை உடையவளாய் இருந்தவள்; இப்போது தலைவனோடு கூடி அரிய உடன்போக்கினை மேற்கொண்டாள்; இனி இன்ன தன்மையள் ஆவாள். இவ்வாறு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று கால நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுவாள் 8.இத்தன்மையளாகிய நற்றாய் மேற்குறித்த செய்திகளையும் பிறவற்றையும் தோழியிடமும் கண்டோரிடமும் புலம்பிக் கூறுவாள். இவை அனைத்தும் உடன் போக்கில் நற்றாய்க்குரிய கூற்றுகளாகும். **(எ-டு)**

தோழியர் சூழத் துறைமுன்றில் ஆடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கால் – தாழாது
கல்லதர் அத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை. (ஐந்திணை ஐம்பது.37)

இப்பாடல் தலைவி உடன்போகிய நிலையில் நற்றாய் கவலையுற்றுக் கூறியது.

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேல் காளையோடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே. (ஐங்குறுநூறு.391)

தலைவி திரும்பி வரும்படி காக்கையே நீ கரைந்தால் உனக்குக் கறிச்சோறு தருவேன் என நற்றாய் கூறுவது இப்பாடலாகும்.

வேறாக நின்னை வினவுவேன் தெய்வத்தால்
கூறாயோ கூறும் குணத்தினனாய் – வேறாக
என்மனைக்கு ஏறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே உய்க்குமோ தான். (திணைமாலை நூற்றைம்பது. 90)

நற்றாய் குறி கூறும் குறத்தியிடம் தலைவன் என்மகளை அவன் மனைக்குக் கொண்டு செல்வானோ? என்மனைக்கு அழைத்து வருவானோ? என வினவுதல். மேற்கூறப்பட்ட அனைத்தும் தலைவன் தலைவியரின் உடன்போக்கால் நற்றாய்க்குக் கூற்று நிகழும் சூழல்களாகும். (39)

## உடன்போக்கில் செவிலிக்குரிய கூற்று

40. ஏமப் பேரூர்ச்[1] சேரியும்[2] சுரத்தும்[3]
தாமே செல்லும் தாயரும் உளரே.

**(இ-ள்)** 1.கட்டுக்காவலை உடையதாய் விளங்கும் பேரூர் 2.அதனை ஒட்டியதாய் மக்கள் சேர்ந்து வாழும் சிற்றூர்.

Scanned with CamScanner

வானம் இறைவன் படர்ந்துஎன வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத் - தேன்இமிரும்
கள்அவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்அழலுள் வேட்டான் உயிர்.

(பு.வெ.மாலை. தும்பை. 22)

12. பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய **நூழில்:** வலிமை கொண்ட பகை மறவனால் தன்படை சிதறக் கண்டான் ஒருவன். அதனைப் பொறுக்காமல் ஒளிவீசும் தன்வாளைக் கொண்டு பகைவர் பலரை ஒருசேரக் கொன்று குவித்தல். **(எ–டு)**

...........

பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத்து அடலே.

(புறநானூறு. 76)

என்பது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தான் ஒருவனாய் நின்று அரசர் எழுவரை வென்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழில் ஆட்டு

(மதுரைக்காஞ்சி. 255 –257)

பல உயிரைக் கொன்று குவித்தலே நூழில் என்பதை மாங்குடி மருதனாரும் எடுத்துரைக்கிறார்.

இவை அனைத்தும் தும்பைத் திணையைச் சிறப்பித்துக் கூறும் துறைகளாகும்.

(14)

## வாகைத் திணையின் இலக்கணம்

**73. வாகை தானே பாலையது புறனே**
**தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்**
**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.**

**[இ–ள்]** வாகைத் திணை பாலை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். குற்றமில்லாத கொள்கையினை உடைய தத்தமக்கு உள்ள இயல்பினைப் பிறரிடமிருந்து வேறுபாடு உண்டாகும்படி மிகுதிப்படுத்திக் காட்டுவர். இதனையே வாகைத் திணை என்று புலவர் கூறுவர்.

**விளக்கம் :** வாகை என்பது வெட்சி முதலான திணைகளைப் போலப் போருக்குரிய திணையாகாது. ஒரு துறையில் இடம்பெற்ற ஏனையோரை விட ஒருவர் ஆற்றலால் மேம்பட்டுச் சிறந்து விளங்கும் தன்மையே வாகையாகும். பலரையும் ஒப்பிட்டு எல்லோரையும் விட மேலானவர் என்று மிகுத்துக் கூறுவது போர் வெற்றியுள் அடங்கும்.

Scanned with CamScanner

**கொற்றவை நிலை**

வெற்றிக்குக் காரணமாக விளங்கும் கொற்றவையைப் புகழ்ந்துரைத்தல். **(எ-டு)**

ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை - மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும். (பு.வெ.மாலை. வெட்சி. 18)

இதிலிருந்து **குறிஞ்சித்திணைக்கு முருகப்பெருமானே** அன்றிக் **கொற்றவையும் தெய்வமாகக்** கொள்ளப்பட்டமையை அறியலாம். (4)

## வெட்சித் திணைப் பகுதி

**கரந்தைத் திணைத் துறைகள் (15 + 6 = 21)**

63. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்[1] உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை[2] வேம்பே[3] ஆர்[4]என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி[5] வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை[6] உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்[7]
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்[8]
ஆர்அமர் ஓட்டலும்[9] ஆபெயர்த்துத் தருதலும்[10]
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்[11]
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்[12]
அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல்[13] வாள்வாய்த்துக் கவிழ்தல்[14]என்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்[15]

காட்சி[16] கல்கோள்[17] நீர்ப்படை[18] நடுதல்[19]
சீர்த்தகு மரபில் பெரும்படை[20] வாழ்த்தல்[21]என்று
இருமூன்று மரபின் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே.

**(இ-ள்)** வெறியாட்டு அயர்ந்த காந்தள் முதல் பெரும்படை வாழ்த்தல் ஈறாக அமைந்த துறைகள் இருபத்தொன்றும் குறிஞ்சித்திணைக்குப் புறனாய் விளங்கும் வெட்சியின் பகுதியாகிய கரந்தைக்கு உரியவை.

Scanned with CamScanner

**(இ-ள்)** உலகின் நடைமுறைகளை நன்கு உணர்ந்தவர் தமிழ்ச்சான்றோர். அவர்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாய் விளங்கும் முதற்பொருளை **1.நிலம்** (இடம்) **2.பொழுது** (காலம்) என்னும் இயல்பினை உடைய இரண்டாகப் பாகுபடுத்தினர் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம்**

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாப் பொருள்களாக இருப்பவை நிலமும் பொழுதும் ஆகும். இவை எல்லா உயிர்களும் உயிர் வாழ்வதற்கு அடிப்படைப் பொருள்களாகும். எனவே அவற்றை முதற்பொருள் என முன்னோர் செய்த வரையறை மிகவும் நுண்ணிய அறிவின் புலப்பாடாகும். உரிப்பொருளாகிய ஒழுக்கத்திற்கு நிலம் அடிப்படை. கருப்பொருள் பிறப்பதற்கு நிலமும் காலமும் தேவை. இவற்றை மனத்திற் கொண்டே நிலம், பொழுது என்னும் இரண்டையும் முன்னோர் **முதற்பொருள்** என்னும் **அடிப்படைப் பொருளாக** அமைத்துக் கொண்டனர்.

மலை, காடு, வயல், கடல் - நிலப்பகுப்புகள். பெரும்பொழுது, சிறுபொழுது - கால வரையறைகள்.

ஆண்டின் கூறாகக் கணக்கிடப்பெறுவது பெரும்பொழுது. அது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு வகைப்படும். நாளின் கூறாகக் கணக்கிடப்பெறுவது சிறுபொழுது. அது மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல் என ஆறாகும்.(4)

## திணைக்குரிய நிலங்களும் – தெய்வங்களும் (4)

**5.** **மாயோன் மேய காடுறை உலகமும்[1]**
**சேயோன் மேய மைவரை உலகமும்[2]**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்[3]**
**வருணன் மேய பெருமணல் உலகமும்[4]**
**முல்லை[1] குறிஞ்சி[2] மருதம்[3] நெய்தல்[4]எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.**

**(இ-ள்)** *1.கரிய நிறத்தை உடைய* **திருமால்** *விரும்பித் தங்கியிருப்பது* **காடு** *சூழ்ந்த நிலப்பகுதி 2.சிவந்த நிறத்தை உடைய* **முருகப் பெருமான்** *விரும்பி உறைவது கரிய முகில்கள் தங்கும்* **மலைகள்** *நிறைந்த நிலப்பகுதி 3.***இந்திரன்** *விரும்பி வாழ்வது இனிமையான நீரைப் பொருந்திய* **வயற்**பகுதி *4.***வருணன்** *விரும்பிக் குடியிருக்கின்ற பெரிய மணற்பரப்பை உடையது* **கடற்**பகுதி. இவை முறையே *1.***முல்லை** *(காடு) 2.***குறிஞ்சி** *(மலை) 3.***மருதம்** *(வயல்) 4.***நெய்தல்** *(கடல்)* என்னும் பெயர்களால் அழைக்கப்படும். இவற்றை இவ்வரிசை முறையன்றி வேறுமுறையால் கூறினும் அவையும் ஏற்றுக் கொள்ளப்படும்.



**விளக்கம் :** முல்லை, குறிஞ்சி என வரிசைப்படுத்திக் கூறவேண்டும் என்னும் எந்த நியதியும் இல்லை. குறிஞ்சி,மருதம் முதலாகவும் நெய்தல், பாலை முதலாகவும் முறைமாற்றியும் வரிசைப்படுத்தலாம். இதனையே தொல்காப்பியர் **சொல்லவும் படுமே** என்னும் உம்மையால் பெற வைத்தார்.

முல்லை முதலான பெயர்கள் அனைத்தும் காரணத்தால் பெயர் பெற்றவை என்பது இளம்பூரணர் கருத்து. ஐந்திணைகளும் அவ்வந் நிலத்தில் சிறந்த பூவாகிய கருப்பொருள்களால் பெற்ற பெயர் என்பதை,

**நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்** (முல்லைப்பாட்டு. 8 - 10)

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே** (குறுந்தொகை.3)

**இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்**
**தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர** (அகநானூறு. 286)

**பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**
**இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்**
**கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்** (குறுந்தொகை.9)

என்னும் தொடர்களைக் காட்டி நிறுவுகிறார். மேலும் வேனிற்காலத்தில் தளிரும் சினையும் வாடுதல் இன்றி நிற்பது **பாலை** என்னும் மரமாகும். அதன் காரணமாகப் பாலை அப்பெயர் பெற்றது என்கிறார் இளம்பூரணர்.

**கோடுறு பல்கால் வாலிணர்ப் பாலை**
என்பது இலக்கிய ஆட்சி. (5)

## திணைகளும் பொழுதுகளும்

### முல்லைத் திணைக்குரிய பொழுதுகள்

**6.** **காரும்[1] மாலையும்[2] முல்லை.**

**(இ-ள்)** *1.பெரும்பொழுதாகிய* **கார்** *(மழைக்)காலமும் 2.சிறுபொழுதாகிய* **மாலைக்** *காலமும் முல்லைத் திணைக்குரிய பொழுதுகளாகும்.*
*கார்காலம் - ஆவணி, புரட்டாசி*
*மாலை - இரவுப்பொழுதின் முற்கூறு (மதியம் 2.00 - மாலை 6.00)* (6)

### குறிஞ்சித் திணைக்குரிய பொழுதுகள்

**7.** **குறிஞ்சி**
**கூதிர்[1] யாமம்[2] என்மனார் புலவர்.**

Scanned with CamScanner

இவ்எழுமூன்றாகிய 21 துறைகளுள் காந்தள் தொடங்கிப் பிள்ளையாட்டை இறுதியாக உடைய பதினைந்தும் நிரைமீட்டலுக்கு உரியவை. எஞ்சிய காட்சி முதலிய ஆறும் ஆநிரை மீட்கச் சென்று உயிர் விட்ட மறவனுக்கு எடுக்கப்படும் நடுகல்லோடு தொடர்புடையவை.

1.வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த **காந்தள்:** வெறியாடலின் சிறப்பினை அறிந்தவன் வேலன். தெய்வம் ஏறிய அவ்வேலன் காந்தள் மலரைச் சூடி ஆநிரை மீட்கச் செல்லும் கரந்தை மறவர் விரும்பும் சொல்லைக் கூறி வெற்றி வேண்டி வெறியாடுதல்.

உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப் **2.போந்தை 3.வேம்பே 4.ஆர்**என வருஉம் மாபெருந் தானையர் **மலைந்த பூ:** மிகுந்த பகைகொண்ட பெருவேந்தர்களும் மறவர்களும் தாம் இன்னார் என்பதைக் காட்டுவதற்காக அடையாளப் பூக்களைச் சூடிக் கொண்டு போர் புரிவர். அவ்வாறு தமிழ்வேந்தர் சூடிக்கொள்ளும் பூக்கள் உயர்ந்த புகழை உடையவை.

மிக்க சிறப்பினை உடைய பனம்பூ சேரர்க்கு உரியது; வேப்பம்பூ பாண்டியர்க்கு உரியது; ஆத்திப்பூ (ஆர்) சோழர்க்கு உரியதாகும். **(எ-டு)**

> பெருஞ்சீர் அருங்கொண் டியளே கருஞ்சினை
> **வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்**
> **மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்**
> கொற்ற வேந்தர் (புறநானூறு. 338)

எனப் பெருவேந்தர் மூவர்க்கும் உரிய பூக்கள் சிறப்பிக்கப்பட்டன.

ஆநிரை களவாடப்பட்டதை அறிந்த பெருவேந்தர் விரைந்து அதனை மீட்கப் புறப்படுவர். எனவே நிரை மீட்டலில் அடையாளப் பூ புகழப்பட்டது.

**5. வாடா வள்ளி:** வாடி வதங்கும் தன்மை கொண்டது வள்ளிக் கொடி. அதற்கு மாறாய் வாடாத தன்மை கொண்டதாகிய **வள்ளி** என்னும் ஒருவகைக் **கூத்தைக்** கரந்தை மறவர் தொடர்ந்து ஆடுதல்.

6. வயவர் ஏத்திய ஓடாக் **கழல்நிலை:** பின்வாங்காமல் போர் செய்வதற்கு உதவுகின்ற வீரக் கழலை மறவர்கள் புகழ்ந்து கூறுதல்.

7.ஓடா உடல்வேந்து அடுக்கிய **உன்ன நிலை:** புறமுதுகிட்டு ஓடாமல் சினந்து நிற்கும் வேந்தனை உன்னம் என்னும் ஒருவகை மரத்தோடு ஒப்பிட்டுக் கூறுதல்.

**உன்னம்** - சகுனம் காட்டும் ஒருவகை மரம். இது தன் நாட்டிற்குக் கேடு வருமானால் இலைகளை உதிர்த்துக் காய்ந்து நிற்கும்; கேடு வராத நிலையில் தழைத்துக் காணப்படும்.



8.மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ் **பூவை நிலை:** கடவுளாகிய திருமாலைப் பொருந்தி இருப்பது நிலைபெற்ற காத்தல் தொழில். அதனை மண்ணுலக அரசர்க்கு உரியதாய்க் காட்டுவது புகழ் பொருந்திய பூவை நிலையாகும். காயாம் பூவினது மலர்ச்சியைத் திருமாலின் மேனிக்கு ஒத்ததாகக் காட்டுவதும் பூவைநிலையாகும் என்கிறார் இளம்பூரணர். **(எ-டு)**

> பூவை விரியும் புதுமலரில் பூங்கழலோய்!
> யாவை விழுமிய யாம்உணரேம் - மேவார்
> மறத்தொடு மல்லர் மறம்கடந்த காளை
> நிறத்தொடு நேர்தருத லான். (பு.வெ.மாலை. பாடாண்.3)

**9.ஆர்அமர் ஓட்டல்:** அரிய போர்க்களத்தில் வெட்சி மறவரைப் புறமுதுகிட்டுத் தோற்றோடச் செய்தல்.

**10. ஆபெயர்த்துத் தருதல்:** வெட்சி மறவர் கவர்ந்து சென்ற ஆநிரையைக் கரந்தையார் மீட்டு வருதல். **(எ-டு)**

> அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
> விழுங்கியபின் வீடுகொண் டற்றால்! - செழுங்குடிகள்
> தாரார் கரந்தை தலைமலைந்து தாம்கோடல்
> நேரார்கைக் கொண்ட நிரை. (பு.வெ.மாலை. கரந்தை.1)

**11.சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தல்:** சிறப்புப் பொருந்திய தம் மன்னனின் மேம்பாட்டைக் கரந்தை மறவர் எடுத்துக் கூறுதல். **(எ-டு)**

> அங்கையுள் நெலலி அதன்பயம் ஆதலால்
> கொங்கலர் தாரான் குடைநிழல்கீழ்த் - தங்கிச்
> செயிர்வழங்கும் வாள்அமருள் சென்(று)அடையார் வேல்வாய்
> உயிர்வழங்கும் வாழ்க்கை உறும். (பு.வெ.மாலை. கரந்தை.12)

**12.தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்:** தன்னிடத்தில் உள்ள போராற்றலின் முயற்சியை முன்வைத்து வஞ்சினமாகிய சூளுரையைத் தன்னோடு சேர்த்துக் கூறுதல். **(எ-டு)**

> ஆள்அமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
> வாளொடு வைகுவேன் யான்ஆக - நாளும்
> கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய்! ஈயப்
> பிழிமகிழ் உண்பார் பிறர். (பு.வெ.மாலை. கரந்தை.10)

**13.வருதார் தாங்கல்:** முன்னே வருகின்ற கொடி ஏந்திய தார்ப் (தூசிப்) படையை ஆற்றலுடன் எதிர்த்துப் போர்புரிதல்.

**14.வாள்வாய்த்துக் கவிழ்தல்:** தன்னுடைய வாள் வலிமையால் பகைவரை வீழ்த்திய கரந்தை மறவன் தானும் வீழ்ந்துபடுதல்.

Scanned with CamScanner

**வஞ்சித் திணைக்குரிய துறைகள் (13)**

**65. இயங்குபடை அரவம்[1] எரிபரந்து எடுத்தல்[2]**
**வயங்கல் எய்திய பெருமை யானும்[3]**
**கொடுத்தல் எய்திய கொடைமை யானும்[4]**
**அடுத்துஊர்ந்து அட்ட கொற்றத் தானும்[5]**
**மாராயம் பெற்ற நெடுமொழி யானும்[6]**
**பொருள்இன்று உய்த்த பேராண் பக்கமும்[7]**
**வருவிசைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை யானும்[8]**
**பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்[9]**
**வென்றோர் விளக்கமும்[10] தோற்றோர் தேய்வும்[11]**
**குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்[12]**
**அழிபடை தட்டோர் தழிஞ்சி[13]யொடு தொகைஇக்**
**கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.**

**(இ-ள்)** இயங்குபடை அரவம் முதல் தழிஞ்சி ஈறாகத் தொகுத்து எண்ணப்பட்ட மிகப்பெரும் சிறப்பினை உடைய இத்துறைகள் பதின்மூன்றும் வஞ்சித் திணைக்குரியவையாகும்.

**1.இயங்குபடை அரவம்:** வஞ்சிப்பூவினைச் சூடிப் போருக்கு எழுந்த படையினரின் ஆரவாரம்.

**2.எரிபரந்து எடுத்தல்:** வஞ்சிப் படை மறவர்கள் பரவிச் சென்று எதிரி நாட்டினரின் உடைமைகளைத் தீயிட்டுக் கொளுத்துதல். **(எ–டு)**

கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே. (புறநானூறு.16)

**3.வயங்கல் எய்திய பெருமை:** படையெடுத்துச் செல்லுகின்ற நிலையில் படை மறவர்களின் சிறப்பினை வெளிப்படையாகக் கூறுவதால் அவர்களிடம் தோன்றும் பெருமை.

**4.கொடுத்தல் எய்திய கொடைமை:** பகைவரை அழிக்க விறுகொண்டு எழும் தம்படை வீரர்களுக்கு அரசன் பெரும் பொருள் கொடுத்து ஊக்கப்படுத்துதல். **(எ–டு)**

பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறல்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே. (புறநானூறு.12)



**5. அடுத்துஊர்ந்து அட்ட கொற்றம்:** பகைவரின் படைக்கூட்டத்திற்குள் முன்னேறிச் சென்று பலரை வீழ்த்தி வெற்றி காணுதல். **(எ–டு)**

வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமம் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே. (புறநானூறு. 93)

**6.மாராயம் பெற்ற நெடுமொழி:** அரசனால் பொருள் கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டோர் மகிழ்ந்து அரசனுக்காக இன்னதைச் செய்வேன் எனப் பெருமிதத்துடன் கூறுதல்.

**7. பொருள்இன்று உய்த்த பேராண் பக்கம்:** பகைவரைத் துச்சமாகக் கருதி அவர்தம் படைக்குள் புகுந்து முன்னேறிப் போர்புரிந்து வீரத்தை வெளிப்படுத்துதல். **(எ–டு)**

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறம் (புறநானூறு.9)

8. வருவிசைப் புனலைக் கற்சிறை போல **ஒருவன் தாங்கிய பெருமை:** பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துவது கல்லால் அமைந்த அணையாகும். அதுபோல எதிர்த்துவரும் பகைவரின் பெரும்படையைத் தனியாளாய்த் - தான்ஒருவனாக நின்று தடுத்து நிறுத்திப் போர்செய்தல். **(எ–டு)**

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவன் ஆகித்
தன்இறந்து வாராமை விலக்கலின் பெருங்கடற்கு
ஆழி அனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க்கு அன்றியும் வாரிப்
புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே (புறநானூறு.330)

**9. பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை:** அரசன் தன் படைமறவர்க்குப் பெரிய சோற்றுத் திரளைக் கொடுத்து மகிழ்வடையச் செய்தல். **(எ–டு)**

நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி
எறும்பு மூசா இறும்பூது மரபின்
கருங்கண் காக்கையொடு பருந்திருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்கால

Scanned with CamScanner

3.அதற்கு அப்பால் கொடியதாய் நீண்டு செல்வது பாலைநில வழியாகும். இவ்விடங்களுக்குச் செவிலித்தாயர் தாமே சென்று தலைவன், தலைவியரைப் பற்றிய செய்திகளை எடுத்துச் சொல்லித் தேடுவர். (எ–டு)

........ கொளைநடை அந்தணீர்
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர் இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும! (பாலைக்கலி.8)

இது அந்தணரை இடைச்சுரத்தில் கண்ட செவிலித்தாய் தலைவன், தலைவியர் குறித்து வினவியது.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே. (குறுந்தொகை. 44)

இது உடன்போக்குச் சென்ற தலைவன் தலைவியரைத் தேடித் தம் கால்கள் பின்னின; கண்கள் ஒளியிழந்தன எனச் செவிலித்தாய் கூறியது.

தலைவன் தலைவியரைச் **சேரியில்** சென்று நற்றாய் **தேடுதலும் சுரத்தில்** சென்று **செவிலித்தாய் தேடுதலும்** அகத்திணை மரபிற்குச் சிறந்தது என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். *(40)*

### அயன்மனைப் பிரிவு

41. **அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.**

**(இ–ள்)** சேரி, சுரம் என்னும் தொலைவிடங்களுக்குப் பிரிந்து செல்வது மட்டுமே பிரிவு ஆகாது. ஒரு தெருவில் தம்வீட்டில் உள்ள உறவினர்களை விட்டுப் பக்கத்து வீட்டிற்குச் செல்வதும் பிரிவாகவே கொள்ளப்படும்.

ஓர் ஊரில் அயல்வீட்டிற்குப் பிரிந்து செல்லும் பரத்தையர் பிரிவும் (அயல்மனைப் பிரிவு) பாலையாகும் என்கிறார் இளம்பூரணர். *(41)*

### உடன்போக்கில் தோழி கூற்று (7)

42. **தலைவரும் விழும நிலைஎடுத்து உரைப்பினும்[1]**
**போக்கற் கண்ணும்[2] விடுத்தற் கண்ணும்[3]**
**நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்[4]**
**வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்**
**தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்[5]**



**நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சுகலுழ்ந் தோளை**
**அழிந்தது களைஎன மொழிந்தது கூறி[6]**
**வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு[7]**
**என்றுஇவை எல்லாம் இயல்புற நாடின்**
**ஒன்றித் தோன்றும் தோழி மேன.**

**(இ–ள்)** தலைவிக்குரிய துன்பநிலையை எடுத்துக்கூறுதல் முதலாக வற்புறுத்திக் கூறுதல் ஈறாகக் கூறப்பட்டவை அனைத்தும் உடன்போக்கில் தோழிக்குரியவையாகும்.

**1.தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல்:** களவு வாழ்க்கையில் இன்னலுறும் தலைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்லா விட்டால் அவளுக்கு உண்டாகும் துன்பநிலையைத் தலைவனுக்குத் தோழி தெரிவித்தல்

**2.போக்கல்:** உடன்போக்கை மேற்கொள்ளுமாறு தூண்டுதல்

**3.விடுத்தல்:** உடன்போக்கை மேற்கொள்ளச் சம்மதித்த தலைவனின் நிலையைக் கூறித் தலைவியைப் போய் வா என விடுத்தல்

**4.நீக்கலின் வந்த தம்முறு விழுமம்:** பிரிந்து செல்வதால் உற்றார் உறவினரும் தானும்படும் துன்ப நிலையைக் கூறுதல்

**5.வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளல்:** உண்மையாகவும் பொய்யாகவும் கண்டோர் கூறும் செய்திகளைக் கேட்டு வருந்துகின்ற தாயின் நிலையைக் கண்டு தலைவியை மீட்டுக் கொணர்வதற்குரிய செயல்களை விரைவுபடுத்துதல்

**6.நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சுகலுழ்ந் தோளை அழிந்தது களைஎன மொழிதல்:** பிரிந்து சென்ற தலைவனை எண்ணிப் பலவகையிலும் வருந்தி மெலியும் தலைவிக்கு இவ்வாறு நடந்து கொள்வது தகாது என இடித்துரைத்தல்.

**7.வன்புறை நெருங்கி வந்ததன் திறம்:** பிரிவிலும் தலைவன் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் அன்புடையவன்; விரைவில் திரும்பி வந்து உன்னை அழைத்துச் செல்வான் என வற்புறுத்திக் கூறுதல்.

உலகியலுக்கு ஏற்ப ஆராய்ந்து கூறப்பட்ட இவ்அனைத்தும் தலைவியும் தானும் வேறல்லர் என்னும் அளவில் ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட தோழிக்குரிய கூற்றுகளாகும். (எ–டு)

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்

Scanned with CamScanner

12. தாமே எய்திய தாங்கரும் **பையுள்:** பகைவரால் சிறைப்படுத்தப்பட்டார் தம்முடைய பொறுத்தற்கரிய துன்பத்தினைக் கூறுவது அருமைப் பாடுடைய **பையுள்** ஆகும். **(எ-டு)**

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத்தணியத்
தாம்இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே. (புறநானூறு. 74)

13. கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய **மூதானந்தம்:** கணவன் இறந்ததைக் கண்டு அவன் உயிரோடு தன் உயிரையும் செலுத்தக் கருதி உயிர்விட்டாள் மனைவி. அவளின் உடலைக் கண்டு வழியில் செல்வோர் வியந்து கூறுவது **மூதானந்தம்** ஆகும். **(எ-டு)**

ஓர்உயி ராக உணர்க உடன்கலந்தார்க்(கு)
ஈர்உயிர் என்பர் இடைதெரியார் – போரில்
விடன்ஏந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்த(து) உயிர். (பு.வெ.மாலை.பொதுவியல். 8)

14. தனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய **முதுபாலை:** கொடுமை மிகுந்த பாலை நிலத்தின் இடையில் கணவன் இறந்தான். அவனை இழந்த மனைவி தனியாளாய் வருந்திக் கூறுவது **முதுபாலை** ஆகும்.

15. கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய **கையறுநிலை:** இறந்தோரின் நிலையை எண்ணி மிக்க வருத்தமுற்று இனி இறக்கப் போகின்றவர் புலம்பிக் கூறுவது **கையறுநிலை** ஆகும். **(எ-டு)**

செற்றன்று ஆயினும் செயிர்த்தன்று ஆயினும்
உற்றன்று ஆயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர்க் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே. (புறநானூறு. 226)

16. காதலி இழந்த **தபுதார நிலை:** மனைவியை இழந்த கணவன் வருந்துவது **தபுதார நிலை** ஆகும்.

17. காதலன் இழந்த **தாபத நிலை:** கணவனை இழந்த மனைவி மிகவும் வருந்தி நிற்பது **தாபத நிலை** ஆகும்.



18. நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச் சொல்லிடை இட்ட **மாலைநிலை:** தன் கணவன் எரியும் பெரிய தீயினுள் புகுந்து உயிரை விட முயல்கிறாள் மனைவி. அதனைத் தடுத்து நிறுத்தும் சான்றோர்களை நோக்கித் துன்பம் தரும் மாலைக் காலத்தில் மனைவி வருத்தமுற்றுக் கூறுவது **மாலைநிலை** ஆகும். **(எ-டு)**

பல்சான் றீரே பல்சான் றீரே
..............
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரிது ஆகுக தில்ல எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓர் அற்றே. (புறநானூறு. 246)

19. அரும்பெரும் சிறப்பின் புதல்வன் பயந்த தாய்தப வரூஉம் **தலைப்பெயல் நிலை:** போர்க்களத்தில் பகைவரை வீழ்த்தி உயிர்விடும் அருமைப்பாடும் பெரும் சிறப்பும் உடைய மகனைப் பெற்றெடுத்தாள் ஒரு தாய். பெற்றெடுத்தவுடன் அவள் இறந்துபோக அப்புதல்வனைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டோர் வருந்திக்கூறுவது **தலைப்பெயல் நிலை** ஆகும்.

20. மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப் பலர்செலச் செல்லாக் **காடு வாழ்த்து:** இடமகன்ற இப்பெரிய உலகத்தில் மரபு நன்கு உணரும்படி பலரும் மாய்ந்தனர். ஆயினும் மாயாத தன்மை கொண்டு விளங்கும் சுடுகாட்டினை வாழ்த்துவது **காடு வாழ்த்து** ஆகும். **(எ-டு)**

எல்லார் புறனும் தான்கண்டு உலகத்து
மன்பதைக்கு எல்லாம் தானாய்த்
தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே. (புறநானூறு.356)

இவ்வாறு கூறப்பட்ட இருபதும் காஞ்சித் திணையின் தன்மையினைத் தெளிவாகப் புலப்படுத்தும் துறைகள் ஆகும். *(19)*

## பாடாண் திணை விளக்கமும் வகையும் (8)

**78/1 பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**
**நாடுங் காலை நால்இரண்டு உடைத்தே.**

**(இ-ள்)** பாடாண் திணைக்கென வரையறுக்கப்பட்ட பகுதி **கைக்கிளை** என்னும் அகத்திணைக்குப் புறனாய் அமைவது. அது ஆராய்ந்து பார்க்கும் நிலையில் எட்டு வகைகளை உடையதாகும்.

Scanned with CamScanner

உக்கத்து மேலும் நடுஉயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லின்நெஞ் சூன்றும் புறம்புல்லின்
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது. (மருதக்கலி.29)

என்பது இளமை தீர்திறம். இது தலைமகளுக்குரியது.

**3. தேறுதல் ஒழிந்த காமம்** - பெரும்பான்மையும் தலைமகளுக்கு உரியது.

இனைந்துநொந்து அழுதனள் நினைந்துநீடு உயிர்த்தனள்
எல்லையும் இரவும் கழிந்தவென் றெண்ணி எல்லிரா
நல்கிய கேள்வன் இவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் துணிபாம்
கலஞ்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போல் தெளிந்து நலம்பெற்றாள்
நல்லெழின் மார்பனைச் சார்ந்து. (நெய்தற்கலி.25)

இது காமத்தால் அறிவழிந்த பெண்ணின் நிலையைச் சுட்டுகிறது.

**4.மிக்க காமத்து மிடல்** - ஒத்த அன்பில் மாறுபட்டுப் பலவகையாக அமைவது. **(எ-டு)**

நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக் – கடுங்கணை
வில்லேர் உழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு (பு.வெ.மாலை. பெருந்திணை.1)

இது யாரும் தடுக்காமல் தலைவன் செலவழுங்குதலை மேற்கொண்டது. (54)

## கைக்கிளை மரபு

### 55. முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப.

**(இ-ள்)** பெருந்திணைக்கு உரியவையாக மேற்கூறப்பட்டவை நான்கு. அவற்றிற்கு மாறாக அமைபவை நான்கும் முன்பு கூறப்பட்ட கைக்கிளைக்கு உரியவை ஆகும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** 1.ஏறா மடல்திறம் - தலைவியை வெளிப்படையாகத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுதல்.
2.இளமை தீராத்திறம் - தலைவியின் அழகுநலத்தைப் பாராட்டுதல்
3.தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம் - புணராத வருத்தம்
4.மிக்க காமத்தின் மாறாகாக திறம் - விருப்பத்தை வெளிப்படுத்துதல்

Scanned with CamScanner

**(இ-ள்)** ஒன்றாத் தமர் முதலாகத் தெளித்தல் ஈறாகக் கூறப்பட்ட சூழல்களின் காரணமாக உரையாடும்நிலை தலைவனுக்கு உரியவையாகும்.

இக்கூற்றுகளை உடன்போக்கு, பொருள் தேடல், இல்லற வாழ்வு என்னும் மூன்று வகையாகப் பாகுபடுத்திக் காணலாம்.

## I. உடன்போக்கில் தலைவனுக்கு நிகழும் கூற்றுகள்

**1.ஒன்றாத் தமர்:** தலைவியைத் திருமணம் செய்துகொடுக்க அவளின் பெற்றோர் மறுத்தல்

**2.பருவம்:** வேனிற்காலத்தின் கொடுமை கண்டு தலைவி மனம் பொறுக்காமல் வருந்தும் நிலையை நினைத்தல்

**3.சுரம்:** தலைவியை உடன்கொண்டு செல்லும் நிலையில் இடைச் சுரத்தில் அவளின் வருத்தம் தீர்த்தல்

**4. வலித்தல்:** உடன்போக்கை மேற்கொள்க என்று வற்புறுத்திக் கூறும் தோழியிடம் காட்டின் இயல்பைக் கூறி மறுத்தல். **(எ-டு)**

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மோடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியள்என் நெஞ்சமர்ந் தோளே (குறுந்தொகை.56)

எய்தி காரணம்

இப்பாடல் உடன்போக்கில் தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு போக மறுத்துக் கூறியது.

**5. விடுத்தல்:** தலைவிக்குப் பாலைநிலத்தின் கொடுமையைக் கூறி அவளை உடன் அழைத்துச் செல்லாமல் விடுத்தல்.

**6.இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக் கடைக்கொண்டு பெயர்தலில் கலங்குஅஞர் எய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட அப்பாற்பட்ட ஒருதிறம்:** ஊரில் உள்ளார் அலர்தூற்றும்படி கற்பு வாழ்க்கைக்காகத் தலைவியை உடன்கொண்டு சென்றதை அறிந்த தலைவியின் உறவினர் அவளைத் தலைவனிடமிருந்து மீட்டுக் கொண்டு செல்வது மரபு. அதனை எண்ணித் தலைவி மிகவும் மனக்கலக்கம் அடைவாள். அந்நிலையில் தலைவியிடம் உன் உறவினர் வருவர் என்றும் வந்தனர் என்றும் தலைவன் அறிவிப்பான். **(எ-டு)**

வினையமை பாவையின் இயலி நுந்தை
மனைவரை இறந்து வந்தனை யாயின்
தலைநாட்கு எதிரிய தண்பெயல் எழிலி
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய பராஅரை வேங்கை

Scanned with CamScanner

1.நோனார் உட்கும் **தானை நிலை:** பகைவருக்கு மிகுந்த அச்சத்தைத் தருகின்ற காலாட்படை மறவரின் போர்ச் சிறப்பைக் கூறுதல். (எ-டு)

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (குறள்.774)

2. நோனார் உட்கும் **யானை நிலை:** பகைவரைத் தாக்கிக் கலக்கத்தை உண்டாக்கும் யானைப் படையின் சிறப்பைக் கூறுதல். (எ-டு)

கையொடு கையொடு ஒருதுணி கோட்டது
மொய்யிலைவேல் மன்னர் முடித்தலை - பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே அங்கோர்
வயவெம்போர் மாண்ட களிறு.

3. நோனார் உட்கும் **குதிரை நிலை:** போராற்றலில் தலைசிறந்ததாய்ப் பகைவருக்குத் துன்பத்தைத் தரும் குதிரைப் படையின் சிறப்பைக் கூறுதல்.

4. வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான்மீண்டு எறிந்த **தார்நிலை:** வேலால் வெற்றி பெறுதலையே நோக்கமாகக் கொண்டு ஓர் அரசன் போர்க்களத்தில் முன்னேறிச் செல்கிறான். அந்நிலையில் அவனைப் பகைவர் பலரும் சூழ்ந்து கொண்டனர். அப்போது தான்செய்யும் போரைவிட்டு அப்பகைவர் கூட்டத்திற்குள் சிக்கிய தம் அரசரை மீட்டுப் பகைவரை வீழ்த்திய படைத்தலைவனின் சிறப்பினைக் கூறுதல். (எ-டு)

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடைஎதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன் (புறநானூறு.180)

5. **இருவர் தலைவர் தபுதிப் பக்கம்:** போர்க்களத்தில் படைத்தலைவர் இருவரும் தம்முள் கடுமையாகப் போரிட்டு ஒருங்கே இறந்துபடுதல். (எ-டு)

காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர - ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல். (பு.வெ.மாலை. தும்பை.8)

6.ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக் **கூழை தாங்கிய பெருமை:** ஓடினர் தம்படைமறவர். அவருக்கு பகைவர் வீரம் கண்டு ஆற்றாது சிதறி ஓடினர் தம்படைமறவர். அவருக்கு ஊக்கம் தந்து தான் ஒருவனாய் முன்னே நின்று பகைவரை ஆற்றலுடன் எதிர்த்துப் போரிடுகின்றவனின் பெருமையினைக் கூறுதல்.



7.**படைஅறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்:** படைக்கருவிகளை இழந்த நிலையில் மறவர் தம்உடல் வலிமையைக் கொண்டு மற்போர்செய்து வெற்றி பெறுதல். (எ-டு)

நீலக் கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வரும் களிற்றொடு வேல்துறந்து இனியே
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே. (புறநானூறு.274)

8.**களிறுஎறிந்து எதிர்ந்தோர் பாடு:** பகையரசன் ஏறி வந்த யானையைக் கொன்று அவனுடன் போரிடுகின்ற மறவர்களின் போராற்றலைப் பெருமைப்படுத்துதல்.

9.களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் **வாளோர் ஆடும் அமலை:** அரசனொடு அவன் ஏறி வந்த யானையையும் கொன்று வெற்றி பெற்றான் ஓர் அரசன். அவனுடைய வாட்படை மறவர்கள் அவ்வுடல்களின் அருகில் நின்று தம்மன்னனைப் புகழ்ந்து ஆடுதல். (எ-டு)

விழவுவீற் றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்கஅவன் கண்ணி
வலம்படு முரசம் துவைப்ப வாளுயர்த்து
இலங்கு பூணன் பொலங்கொடி உழிஞையன்
மடம்பெரு மையின் உடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத்து ஆடும் கோவே. (பதிற்றுப்பத்து.56)

10. வாள்வாய்த்து இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் **தொகைநிலை:** போர்க்களத்தில் பகைகொண்டு ஒருவரை மற்றவர் வாளால் வெட்டுவர். அவ்இருதிறத்து அரசர்கள், படைமறவர்கள் ஆகியோருள் ஒருவரும் மிஞ்சாமல் முழுவதுமாக இறந்துபடுதல்.

11. செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ ஒருவனை மண்டிய **நல்லிசை நிலை:** போர்க்களத்தில் தம்அரசன் பகைமறவன் ஒருவனால் இறந்துபட்டான். அம்மறவனைக் கண்டு மிகுந்த சினம் கொண்டான் படைத்தலைவன். அவ்வீரன் அருகில் சென்று போர்செய்து அவனைக் கொன்று தன்புகழினை வெளிப்படுத்துதல். (எ-டு)

Scanned with CamScanner

### கைக்கிளை, பெருந்திணைகளுக்கு உரியோர் (2)

25. அடியோர் பாங்கினும்[1] வினைவலர் பாங்கினும்[2]
கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்.

**(இ-ள்)** மக்கட் கூட்டத்துள் 1.பிறருக்கு வழிவழியாய் அடிமைத் தொழில் செய்வோர் 2.பிறர் ஏவலுக்கு ஏற்பப் பணியாற்றுவோர் என்னும் நிலையில் வாழ்வோர் உள்ளனர். அவர்கள் முல்லை முதலான அன்பின் ஐந்திணை ஒழுக்கத்திற்கு உரியவர் ஆகார். அவற்றிற்கு மாறாகிய கைக்கிளை, பெருந்திணைகளுக்கே உரியர் ஆவர் என்று சொல்லுவர் புலவர்.

அகவாழ்க்கை என்பது அறம், பொருள், இன்பங்களில் வழுவாமல் நடைபெறுவது. அந்நிலை அடிமைகளுக்கும் ஏவலருக்கும் பொருந்தாது. மேலும் இவர்கள் தம்நிலையை எண்ணிக் குறைபாடு உடையவராய்த் தாழ்வு மனப்பான்மையுடன் வெட்கமுற்று வாழ்வர். பிறர்தம் குறிப்பறியாமல் தம்விருப்பத்திற்கு ஏற்ப இன்பம் அடைய எண்ணுவர். சுதந்திரமாய் வாழ்பவருக்கே அன்பின் ஐந்திணை அமையும். இத்தன்மை அற்றவருக்குக் கைக்கிளையும் பெருந்திணையுமே பொருந்துவன என இளம்பூரணர் விளக்கம் தருகிறார். *(25)*

### கைக்கிளை, பெருந்திணைக்குரிய தலைமக்கள்

26. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.

**(இ-ள்)** பிறரை ஏவிப் பணிகொள்ளும் சிறப்பிற்கு உரியோர் திணைக்குரிய நிலமக்களும் தலைமக்களும் ஆவர். உயர்ந்தோராகிய அவர்கள் ஏவலர்களைப் போலவும் அடிமைகளைப் போலவும் குறிப்பறியாமல் இன்பம் அடையக் கருதும் நிலையில் இழிநிலை எய்துவர். அந்நிலைகளில் முற்கூறப்பட்ட கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்களுக்கு அவர்கள் உரியவர் ஆதலும் உண்டு.

அறம், பொருள், இன்பங்கள் வழுவ மகளிரை அடைய நினைக்கும் நிலையில் தலைமக்களும் கைக்கிளை, பெருந்திணைக்கு உரியராவர் என்கிறார் இளம்பூரணர். *(26)*

## பாலைத் திணைக்குரிய பிரிவுகள் (3+2=5)

### பிரிவின் வகைகள் (3)

27. ஓதல்[1] பகையே[2] தூது[3] இவை பிரிவே.

**(இ-ள்)** *1.கல்வி கற்றல் 2.பகைவரை அழித்தல் 3.தூது செல்லுதல்* ஆகிய தொழில்கள் மூன்று. இவை தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்து செல்வதற்கு உரிய காரணங்களாகும். *(27)*

Scanned with CamScanner

**பாடாண்திணை கைக்கிளைக்குப் புறனாதல்**

கைக்கிளை என்பது நிலம்பெறாத அகத்திணை. இது ஒரு நிலத்திற்குரியது என்னும் வரையறை இல்லாமல் ஒருதலைக் காமமாகி எல்லாத் திணைக்கும் உரியதாய் வரும். அதனைப் போலப் பாடாண் திணையும் தனித்து நிற்பதன்றிப் போர்த்திணை ஐந்தற்கும் பொருந்தி வரும். ஒருவரிடம் ஒரு பயனைப் பெறக் கருதி அதனைப் பெறுவதற்காக ஒருதலையாய்ப் புகழ்ந்துரைப்பது பாடாண். இக்காரணங்களால் பாடாண் என்னும் புறத்திணை கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாய் அமைகிறது. கைக்கிளையாகிய காமப் பொருண்மையில் இயற்பெயரைச் சேர்த்துக் கூறுவதால் **புகழை நோக்குதல்** பாட்டுடைத் தலைவனின் கருத்தாகும். **பரிசில் பெறுதல்** பாடுவோனின் கருத்தாகும். அவ்விருவரும் வேறு வேறு கருத்துடைமையால் இது ஒருதலை வேட்கையாய்க் கைக்கிளை ஆயிற்று.

பாடுதல் - புலவர் செயல். புகழ்பெறுதல் - வேந்தன் நிலை.

**பாடாண் திணையின் வகைகள் (8)**

பாடப்படும் ஆண்மகனின் ஒழுக்கம் பாடாண் திணையாகும். அது பாட்டுடைத் தலைவனின் வீரம், கொடை, புகழ் போன்றவற்றைப் பெயர் சுட்டிச் சிறப்பித்துக் கூறுவதாகும். அப்பாடாண் தேவர் பாடாண், மக்கள் பாடாண் என இருவகைப்படும். பொதுவாகப் பாடாண் திணை,

| | |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து வகை | 2. வாழ்த்தியல் வகை |
| 3. மங்கல வகை | 4. செவியறிவுறுத்தல் |
| 5. ஆற்றுப்படை வகை | 6. பரிசில் துறை வகை |
| 7. கைக்கிளை வகை | 8. வசை வகை |

என எட்டு வகைப்படும். (20)

**பாடாண் பாட்டின் பொருண்மைகள் (6 + 1 = 7)**

**79. அமரர்கண் முடியும் அறுவகை யானும்**
**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**
**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.**

**(இ-ள்)** தெய்வங்களுக்கு உரிமை உடையனவாய் விளங்கும் புகழ்மொழிகள் ஆறாகும். குற்றமற்ற அன்பின் ஐந்திணையைப் பொருந்தி வருவது அகத்திணை. இவ்விரு வகைகளாய் அமைந்த ஏழனையும் நிலைக்களமாகக் கொண்டு அமையும் ஒரு பகுதி பாடாண் திணை ஆவதற்கும் பொருந்திவரும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் : தேவர்க்குரிய பாடாண்:** 1.கொடிநிலை 2.கந்தழி 3.வள்ளி 4.புலவராற்றுப்படை 5.புகழ்தல் 6.பரவல் என்னும் ஆறும் தெய்வத்திற்கு உரியவை. 7.குற்றமற்ற இல்லற வாழ்க்கையாகிய அகத்திணை மக்களுக்குரியது.



கடவுளர்க்கு உரியவற்றைப் பாட்டுடைத் தலைவராகிய மனிதர்க்கும் பொருந்துவதாக வைத்துப் பாடுதல்; மக்களுக்குரிய அகம் பற்றிய செய்திகளைப் பாட்டுடைத் தலைவர்க்கு வைத்துப் பாடுதல் என்னும் இரு நிலையிலும் பாடாண் பாட்டு அமையும். இயற்பெயரை வெளிப்படையாகக் கூறியும் ஊர், நாடு போன்றவற்றால் பாட்டுடைத் தலைவனை இன்னார் எனக் குறிப்பாக உணர வைத்தும் இப்பாடாண் பாட்டு இயற்றப்படும். (21)

**பொருள் வேறுபாடுகள்**

**80. வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்**
**பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்**
**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**
**வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட ஏழ் நிலைகளிலும் பாடாண் பாட்டு அமையும். அது ஒருவர் மற்றொருவரைப் போற்றிப் புகழ்தல், வாழ்த்தி வணங்குதல் என்னும் இரண்டைக் கருதியும் பாடப்படும். முன்னோர் கூறிய அறம், பொருள் என்பவற்றோடு இன்பப் பகுதியாகிய காமம் என்னும் பொருண்மையிலும் பாடாண் பாட்டு அமையும். இவ்வாறு அமையும் **வாழ்த்தல், புகழ்தல், காமக்குறிப்பு** என்னும் இம்மூன்று நிலைகளும் செந்துறை வண்ணத்தில் பாடுவதைப் புலவர்கள் நீக்காமல் ஏற்றுக்கொள்வர்.

இறைவனைப் பற்றிய தேவபாணியும் அகப்பொருள் பாட்டும் இசைத்தமிழுக்கு மட்டுமே உரியவை. மக்களைச் சார்த்திப் பாடும் பாடாண் பாட்டுச் **செந்துறைப் பாடாண் பாட்டு** ஆகும். இதனை இன்ன வகையான செய்யுளில்தான் பாட வேண்டும் என்று எந்த வரையறையும் இல்லை. இசைப்பாக்களாகவும் இயற்பாக்களாகவும் பாடுவதற்குரியது இப்பாடாண் பாட்டு ஆகும்.

போற்றிப் புகழ்தல் படர்க்கைக்குரியது. வாழ்த்தி வணங்கல் முன்னிலைக்குரியது. **(எ-டு)**

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி (திரிகடுகம். கடவுள் வாழ்த்து)

இது புகழ்தலுக்குரியது.

வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய உருவம் வெளிப்படுத்தாய் - வெய்ய
அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்
நெடுந்தகை நின்னையே யாம். (பு.வெ.மாலை.பாடாண். 2)

இது பரவலுக்குரியது.

Scanned with CamScanner

ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்ற **பாணன்** வறுமையுற்ற பாணனை ஆற்றுப்படுத்தியது **சிறுபாணாற்றுப்படை**. இதன் ஆசிரியர் **நத்தத்தனார்**. தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தியது **பெரும்பாணாற்றுப்படை**. ஆசிரியர் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்**.

கரிகாற் பெருவளத்தானிடம் பரிசில் பெற்ற **பொருநன் ஒருவன்** மற்றொரு பொருநனைப் பரிசில் பெற ஆற்றுப்படுத்தியது **பொருநராற்றுப்படை**. இதனை இயற்றியவர் **முடத்தாமக் கண்ணியார்**.

மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியில்
கேட்பின் அல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி உளரக்
கலவ மஞ்ஞையின் காண்வர இயலி
மாரி அன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே. (புறநானூறு.133)

ஏணிச்சேரி முடமோசியார் பாடிய இப்பாடல் ஆய் அண்டிரனிடம் **விறலியை** ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.

இம்மரபில் புதுமையாகப் **புலவர் மற்றொரு புலவரை** ஆற்றுப்படுத்தும் நோக்கில் அமைந்தது புலவராற்றுப்படை. இப்பொருண்மையில் நக்கீரர் பாடியது **திருமுருகாற்றுப்படையாகும்**.

**6.** சிறந்த நாளினில் செற்றம் நீக்கிப் பிறந்த நாள்வயின் **பெருமங்கலம்:** அரசன் நாள்தோறும் தன் பகைவர்மீது கொண்டுள்ள சினத்தைத் தன் பிறந்தநாளில் மட்டும் விட்டொழித்துப் புனித நீராடுவது **பெருமங்கலம்** ஆகும். **(எ-டு)**

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார் – எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு. (முத்தொள்ளாயிரம். 82)

**7.** சிறந்த சீர்த்தி **மண்ணுமங்கலம்:** ஒவ்வோராண்டும் கொண்டாடப் படும் முடிசூட்டு விழா நாளில் அரசன் புண்ணிய நீராடுவது **மண்ணுமங்கலம்** ஆகும்.

**8.** நடைமிகுத்து ஏத்திய **குடைநிழல் மரபு:** அரசனின் குளிர்ந்த நிழல் தரும் நல்லாட்சியைச் சிறப்பிப்பதற்குக் காரணமாக அமைவது வெண்கொற்றக் குடை ஆகும். அதனைப் புகழ்ந்து கூறுவது **குடைநிழல் மரபு** ஆகும். **(எ-டு)**



திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றுஇவ்
அங்கண் உலகளித்த லான் (சிலம்பு. மங்கலம்.1)

**9.** மாணார்ச் சுட்டிய **வாள்மங்கலம்:** பகைவரை அழித்து ஒடுக்குவதற்குக் காரணமாக அமைவது வீரவாள். அவ்வாளினைப் புனிதநீராட்டி வழிபடுவது **வாள் மங்கலம்** ஆகும்.

**10.** மன்எயில் அழித்த **மண்ணுமங்கலம்:** பகைவர்களின் நிலைபெற்ற மதிலாகிய அரணை அழித்து நீராடுவதைப் புகழ்ந்து கூறுவது **மண்ணு மங்கலம்** ஆகும்.

**11. பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை:** தன்னை நாடிவந்த பரிசிலர்களை வினவி அவர்களுக்கு வேண்டியதை அரசன் கொடுப்பான். அதனைப் பெற்றவர் புகழ்ந்து கூறுவது **பரிசில் கடைக்கூட்டு நிலை** ஆகும்.

**12.** பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றும் **இருவகை விடை:** அரசரிடமிருந்து பரிசில் பெற்றோர் அப்பரிசிலைப் போற்றி மகிழ்ச்சி அடைவர். பின்னர் அரசரிடம் தாம் போக வேண்டும் என **விடை கேட்பர்**. அதற்கு அரசன் சென்று வருக என **விடை கொடுத்து** அனுப்புவான். இவையே **இருவகை விடைகள்** ஆகும். **(எ-டு)**

நின்நயந்து உரைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மான் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே. (புறநானூறு.163)

இது குமணனிடம் பரிசில்பெற்று அவன் விடை கொடுக்க விடை பெற்றுக் கொண்ட பெருஞ்சித்திரனாரின் பாடலாகும்.

**13.** அச்சமும் உவகையும் எச்சம் இன்றி நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் காலம் கண்ணிய **ஓம்படை:** நாளாலும், பறவைகளாலும் பிறவற்றாலும் அச்சம், மகிழ்ச்சி என்பவை நீங்காமல் தொடர்ந்து வரும். அவற்றுள் தீமையிலிருந்து நீக்கி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களில் நன்மை உண்டாகப் பாதுகாக்க வேண்டுவது **ஓம்படை** ஆகும்.

Scanned with CamScanner

இப்பாடலில் கூறப்பட்ட கருப்பொருள்கள் 1.வண்டு 2.தாமரை 3.குவளை என்பன. இவை முறையே 1.தலைவனுக்கும் 2.தலைவிக்கும் 3.பரத்தைக்கும் பிறிதுமொழிதலாய் அமைந்து உள்ளுறை உவமம் ஆயின.

1. வண்டு - தலைவன்
2. தாமரை - தலைவி
3. குவளை - பரத்தை

குவளை மலரும் தாமரை மலரும் மருதத் திணைக்குரிய கருப் பொருள்கள். இவற்றால் இப்பாடல் மருதத்திணைக்கு உரியதாயிற்று. (51)

**ஏனை உவமம்**

**52. ஏனை உவமம் தான்உணர் வகைத்தே.**

**(இ-ள்)** உள்ளுறைக்கு மாறாக அமைவது ஏனை (வெளிப்படை) உவமம் ஆகும். இது ஆராய்ச்சிக்கு இடமளிக்காமல் தன்னியல்பால் வெளிப்படையாகக் கருத்தைப் புலப்படுத்தும் இயல்பைக் கொண்டதாகும்.

**விளக்கம்** : நிறம், வடிவம், பயன், தொழில் ஆகிய நான்கன் அடிப்படையாகப் பொருளினது தன்மையை எடுத்துரைப்பது ஏனை உவமம். **(எ-டு)**

குரவ நீள்சினை உறையும்
பருவ மாக்குயில் கௌவையிற் பெரிதே (ஐங்குறுநூறு.369)

இது குயிலின் குரலை உவமித்ததால் பாலைத்திணை ஆயிற்று.

துருக்கம் கமழும் மென்தோள்
துறப்ப என்றி இறீஇயர்என் உயிரே (சிற்றட்டகம்)

துருக்க மலரை உவமை கூறியதால் இது குறிஞ்சித் திணையை உணர்த்தியது. (52)

## கைக்கிளையின் இலக்கணம்

**53. காமம் சாலா இளமை யோள்வயின்[1]**
**ஏமம் சாலா இடும்பை எய்தி[2]**
**நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்[3]**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்[4]**
**சொல்எதிர் பெறாஅன்[5] சொல்லி இன்புறல்[6]**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.**

**(இ-ள்)** 1.ஒத்த காம உணர்வு பொருந்தாத அழகிய இளம்பெண்ணைக் கண்டான் ஒருவன் 2.தன்னால் காணப்பட்ட அப்பெண்ணின் அழகில் மயங்கித் தன்னைக் காத்துக் கொள்ளமுடியாத பெருந்துன்பத்தை அடைகிறான்.

Scanned with CamScanner

**(இ-ள்)** 1.தெய்வம் 2.உணவு 3.விலங்கு 4.மரம் 5.பறவை 6.பறை 7.தொழில் 8.யாழ் (பண்) என்பன எட்டும் கருப்பொருள்களாகும். இவ்வாறு பெயர் சுட்டப்பட்டவை அன்றி இவற்றை ஒத்த பிற பொருள்களும் கருப்பொருள்கள் ஆகும் என்று கூறுவர் புலவர்.

பிற என்றதனால் பூ, நீர் என்பவற்றையும் சேர்த்து இளம்பூரணர் கருப்பொருள்களைப் பத்தாகக் காட்டுகிறார்.

முதற்பொருளாகிய **நிலத்தையும் காலத்தையும்** அடிப்படைப் பொருள்களாகக் கொண்டு பிறப்பவை **கருப்பொருள்களாகும்.** இக்கருப்பொருள்களின் வகைகளை இளம்பூரணர் பொருத்தமுறப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். *(20)*

**திணைக்குரிய கருப்பொருள்கள்**

| பொருள் | முல்லை | குறிஞ்சி | பாலை | மருதம் | நெய்தல் |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | திருமால் | முருகன் | கொற்றவை | இந்திரன் | வருணன் |
| உணவு | வரகு, முதிரை | தினை, ஐவனம், வெதிர் நெல் | வழிப்பறிப் பொருள் | நெல் | உப்புவிலை, மீன்விலையால் பெற்றவை |
| மா (விலங்கு) | மான், முயல் | யானை, புலி, பன்றி, கரடி. | வலியழிந்த யானை, புலி, செந்நாய் | எருமை, நீர்நாய் | சுறாம் (முதலை), சுறா |
| மரம் | கொன்றை, குருந்து, புதல் | வேங்கை, கோங்கு | பாலை, இருப்பை, கள்ளி, சூரை | மருதம், காஞ்சி | புன்னை, கைதை |
| புள் (பறவை) | கானக்கோழி | மயில், கிளி | எருவை, பருந்து | அன்னம், அன்றில் | கடற் காக்கை |
| பறை | ஏறுகோட் பறை | வெறியாட்டுப்பறை தொண்டகப்பறை | ஆறலைப்பறை சூறைகோட்பறை | நெல்லரி பறை | நாவாய்ப் பறை |
| செய்தி (தொழில்) | நிரை மேய்த்தல் | தேனழித்தல் | ஆறலைத்தல் | உழவு | மீன்படுத்தல், உப்பு விளைத்தல் |
| யாழின் பகுதி(பண்) | சாதாரி | குறிஞ்சிப்பண் | பாலை | மருதம் | செவ்வழி |
| பூ | முல்லை, பிடவு, தளவம் | வேங்கைப்பூ காந்தள் பூ குறிஞ்சிப்பூ | மராஅம்பூ | தாமரை, கழுநீர் | நெய்தல் |
| நீர் | கான்யாறு | சுனை நீர், அருவி நீர் | அறுநீர்க்கூவல், அறுநீர்ச்சுனை | ஆற்றுநீர், பொய்கைநீர் | கேணி நீர், கடல் நீர் |



**கருப்பொருள் மாறி வருதல் (2)**

21. **எந்நில மருங்கின் பூவும்[1] புள்ளும்[2]**
**அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்**
**வந்த நிலத்தின் பயத்த ஆகும்.**

**(இ-ள்)** ஒரு திணைக்கு உரியவையாய்க் கூறப்பட்ட 1.மலர்களும் 2.பறவைகளும் உள்ளன. அவை அந்தந்தத் திணைக்குரிய நிலத்திற்கும் காலத்திற்கும் பொருந்தாமல் வேறு திணையிலும் இடம்பெறலாம். சிறுபான்மை மாறி வருவனவற்றை அந்தத் திணைக்குரிய கருப்பொருளாகவே அமைத்துக் கொள்ள வேண்டும்.

**விளக்கம்**

இன்ன திணைக்கு இவை என வரையறுத்துக் கூறப்பட்ட கருப்பொருள்கள் பெரும்பான்மை கருதிக் கூறப்பட்டவை. அவை சிறுபான்மை மாறியும் வரும். **குறிஞ்சி** நிலத்திற்குரிய பறவை **மயில்.** அது இடம்பெயர்ந்து **காடு, வயல்** என்னும் நிலங்களிலும் காணப்படும். எனவே அதனை முல்லை, மருத நிலங்களுக்கு உரியதாகக் கொண்டு பாடல் இயற்றுவது திணை மயக்கம் ஆகாது.

தேக்கு குறிஞ்சி நிலத்திற்கு உரியது. அது தற்காலத்தில் எல்லா நிலங்களிலும் வளர்கிறது. எனவே தேக்கு அனைத்துத் திணைகளுக்கும் உரிய மரமாகப் பாடலில் இடம்பெறும். *(21)*

**திணைக்குரிய மக்கட்பெயர்கள் அமையும் முறை (2)**

22. **பெயரும்[1] வினையும்[2] என்று ஆஇரு வகைய**
**திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.**

**(இ-ள்)** திணைக்குரிய நிலங்களில் நிலைத்து வாழும் மக்களுக்கு உரிய பெயர்கள் இரண்டு வகைப்படும். அவை 1.குலத்தால் அமையும் பெயர் 2.தொழிலால் அமையும் பெயர் என்பனவாகும். இவ்விரண்டும் திணை ஒழுக்கத்தைப் பொருந்தி வாழும் தலைமக்களுக்கும் உரிமை பூண்டு வரும். இவை திணைநிலைப் பெயர் எனப் பொதுவாக வழங்கப்படும்.

**விளக்கம்**

திணைநிலைப் பெயர் என்று கூறியதால் ஒரு திணைக்கு உரிய பெயர் பிற திணையில் உள்ளவருக்குப் பெயராக அமையாது. உலகத்தில் வாழும் மக்கள் ஒத்த இயல்புடையவர். அவர்களை மாடு, புலி, புறா, மயில் என்பன போல் வேறுபடுத்திக் காட்டுவது அரியதாகும். எனவே மக்களைத் திணைப்பெயரால் முன்னோர் வேறுபடுத்திக் காட்டினர் என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். *(22)*

Scanned with CamScanner

## உழிஞைத் திணையின் துறைகள் (12)

69. குடையும்[1] வாளும்[2] நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும்[3] கடைஇச்
சுற்றுஅமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும்[4] அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்[5] மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்[6]
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்[7] அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்[8]
மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்[9]
இகல்மதில் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்[10]
வென்ற வாளின் மண்ணோடு[11] ஒன்றத்
தொகைநிலை[12] என்னும் துறையொடு தொகைஇ
வகைநால் மூன்றே துறைஎன மொழிப.

**(இ-ள்)** குடைநாட்கோள் முதலாகத் தொகைநிலை ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டும் உழிஞைத் திணையின் துறைகளாகும் என்று சொல்லுவர் புலவர்.

**1.குடை நாள்கோள்:** போர் தொடங்குவதற்கு அறிகுறியாக நல்ல நாளில் வெண்கொற்றக் குடையினைப் புறப்பாடு செய்தல். **(எ-டு)**

நெய்யணிக செவ்வேல்; நெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக; – வையகத்து
முற்றக் கடிஅரணம் எல்லாம் முரண்அவிந்த
கொற்றக் குடைநாள் கொள. (பு.வெ.மாலை. உழிஞை. 1)

**2.வாள் நாள்கோள்:** வெற்றியைத் தருகின்ற அரசனின் வீர வாளினை நல்ல நாளில் புறப்பாடு செய்தல். **(எ-டு)**

வாள்நாள் கொளலும் வழிமொழிந்து வந்(து)அடையாப்
பேணார் பிறைதொடூஉம் பேமதில் – பூணார்
அணிகொள் வனமுலையார் ஆடரங்கம் ஏறிப்
பிணிகொள்பேய் ஆடும் பெயர்த்து. (பு.வெ.மாலை. உழிஞை. 2)

**3.மடையமை ஏணிமிசை மயக்கம்:** மதிலின்மீது சார்த்துவதற்குரிய ஏணியைப் பொருந்துமாறு அமைத்து அதன்மீது ஏறிநின்று பகைவருடன் கலந்து போர் செய்தல். **(எ-டு)**

சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகம் கழிய – அடுமுரண்
ஆறினார் அன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி பலர். (பு.வெ.மாலை. உழிஞை. 16)



**4.கடைஇச் சுற்றுஅமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வு:** உழிஞை அரசன் தன்படையைச் செலுத்தி அருகில் உள்ள பகைவரை வீழ்த்திப் புறமதிலைக் கைப்பற்றி அகமதிலை முற்றுகையிடுதல். **(எ-டு)**

காலை முரசம் மதில்இயம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும் – மாலை
அடுதும் அடிசில்என்(று) அம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு. (பு.வெ.மாலை. உழிஞை. 19)

**5.முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி:** உள்ளே இருக்கும் நொச்சி மறவர் அரணைக் காப்பதற்காகப் போர்செய்து இறந்துபடுதல். **(எ-டு)**

நீரறவு அறியா நிலமுதற் கலந்த
கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளிர் ஐதகல் அல்குல்
தொடலை யாகவும் கண்டனம் இனியே
வெருவரு குருதியொடு மயங்கி உருவுகரந்து
தொறுவாய்ப் பட்ட தெரியல்ஊன் செத்துப்
பருந்துகொண்டு உகப்பயாம் கண்டனம்
மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே. (புறநானூறு.271)

**6.புறத்தோன் வீழ்ந்த புதுமை:** மதிலை வளைத்து நின்ற உழிஞை மறவர்கள் உள்ளே இருந்த நொச்சியாரால் வீழ்த்தப்படுதல்.

**7.நீர்ச்செரு வீழ்ந்த பாசி:** அகழியின் இருகரைகளிலும் நின்று விலகியும் நெருங்கியும் நீரில் காணப்படும் பாசிபோல் இருதிறத்துப் படைவீரர்களும் போரிட்டு வீழ்தல். **(எ-டு)**

நாவாயும் தோணியும் மேல்கொண்டு நள்ளாதார்
ஓவார் விலங்கி உடலவும் – பூவார்
அகழி பரந்(து)ஒழுகும் அம்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர். (பு.வெ.மாலை. உழிஞை. 14)

**8.அது அன்று ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறன் (பாசிமறன்):** அது ஒழிய ஊர்ப்பக்கத்தில் நடந்த போரில் விருப்பத்தோடு பங்குகொண்டு தன் ஆற்றலைக் காட்டி இறந்துபடுதல்.

**9.மதில்மிசைக்கு இவர்ந்தோன் மேலோர் பக்கம்:** கோட்டை மதில்மீது ஏறிநின்று அம்மதிலைக் கைப்பற்றுவதற்காக இருதிறத்து மறவர்களும் போர்செய்தல்.

**10.இகல்மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலம்:** தம்முடன் மாறுபட்டு மதில்மேல் நின்று போர்செய்த அரசனைக் கொன்று நீராடிய பின்னர்ப் பகையரசனின் மணிமுடியைச் சூடிக்கொள்ளுதல். **(எ-டு)**

Scanned with CamScanner

உள்ளினேன் அல்லனோ யானேமுள் எயிற்றுத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
எமதும் உண்டோர் மதிநாள் திங்கள்
உரறுகுரல் வெவ்வளி எடுப்ப நிழல்தப
உலவை ஆகிய மரத்த
கல்பிறங்கு மாமலை உம்பர்அஃது எனவே (நற்றிணை.62)

இப்பாடல் முன்பு பிரிந்து சென்ற காலத்தில் தான்அடைந்த வருத்தத்தைக் கூறிப் பொருள்வயின் பிரியக் கருதும் நெஞ்சிடம் அப்பிரிவைக் கைவிடுமாறு தலைவன் கூறுவதாகும். (46)

**செலவழுங்கல் - பாலைத்திணை**

**47. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.**

**(இ-ள்)** முன்னர்ப் பிரிந்து சென்ற நிலையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கூறித் தலைவன் தலைவியைப் பிரியாமல் செலவழுங்குவான். அவ்வாறு செய்வதும் பாலைத் திணையாகும்.

தலைவனின் பிரிவால் தலைவி கலங்குவாள். அத்தலைவியின் மனத்தைத் தேற்றுவதற்காகச் சிலநாட்கள் தலைவன் பிரிவைத் தள்ளிப் போடுவான். ஆயினும் நிலையாக வீட்டில் தங்க மாட்டான். பிரிவை ஒத்தி வைத்தலாகிய **செலவழுங்கும்** காலமும் **பாலைத் திணையாகவே** கருதப்படும். (47)

**முப்பொருள் மயக்கம்**

**48. மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.**

**(இ-ள்)** தொன்றுதொட்டு வழங்கும் அகப்பொருளுக்குப் பெருமை சேர்ப்பன முப்பொருள்களாகும். அவை தமக்கெனக் கூறிய மரபிலிருந்து மாறுபடாத வகையில் அகப்பொருள் மாந்தர்தம் கூற்றுகளில் விரவி வரும் என்று பொருள் இலக்கணம் அறிந்தோர் கூறுவர்.

**விளக்கம் :** பாலைத் திணைக்கு உரியவை பாசறையில் புலம்புதலும் தேர்ப்பாகற்குக் கூறுதலும் ஆகும். இக்கூற்றுகளில் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவி வரும். இவற்றைப் போல் பிற பொருள்கள் மயங்கி வருதலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்கிறார் இளம்பூரணர்.

**மரபுநிலைத் திரியாமை**

கார்காலத்தில் திரும்பி வருகிறேன் என்று கூறிப் பிரிகிறான் தலைவன். போர்க்கொடியில் ...

Scanned with CamScanner

அலந்தனென் வாழி தோழி கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குருஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந்து ஒழிக இவ்அழுங்கல் ஊரே. (நற்றிணை. 149)

இப்பாடல் தலைவனோடு உடன்போக்குச் செல்ல இசைவு தெரிவிக்கும் தலைவியின் கூற்றாகும்.

**பாணர்க்குரிய கூற்று**

நினக்கியாம் பாணரும் அல்லேம் எனக்கு
நீயும் குருசிலை அல்லை மாதோ
நின்வெங் காதலி நன்மனைப் புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே. (ஐங்குறுநூறு. 480)

இது தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்குச் சென்ற பாணன் தலைவனை நெருங்கிக் கூறியது.

**பார்ப்பனர்க்குரிய கூற்று**

துறந்ததற் கொண்டு துயரடச் சாஅய்
அறம்புலந்து பழிக்கும் அளைகண் ஆட்டி
எவ்வ நெஞ்சிற்கு ஏமம் ஆக
வந்தன ளோநின் மடமகள்
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே. (ஐங்குறுநூறு.393)

இப்பாடல் தலைமகள் உடன்போய் மீண்டு வந்த நிலையில் பார்ப்பனன் அவள் தாய்க்குச் சொல்லியது. (45)

**பாலைக்குரிய பிரிவின் மரபு**

**46. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.**

**(இ-ள்)** தலைவியை விட்டுப் பிரியக் கருதுவான் தலைவன். அந்நிலையில் முன்னர்ப் பிரிந்து சென்றபோது நடந்த நிகழ்ச்சிகள், பின்னர் நடக்கப் போவதை ஆராய்ந்து பார்த்துப் பேசுவதற்குக் காரணமாகவும் அமையும். **(எ-டு)**

வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை அயாஉயிர்த் தன்ன
என்றூழ் நீடிய வேய்பயில் அழுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து

Scanned with CamScanner

உய்ந்(து)ஒழிவார் ஈங்(கு)இல்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்(து)அமருள் ஏற்றார் முரண்முருங்கத் – தம்தமரின்
ஒற்றினான் ஒற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமல் சூழ்ந்து. (பு.வெ.மாலை. வெட்சி. 7)

**6. முற்றிய ஊர்கொலை:** எல்லையில் தங்கியிருக்கும் வெட்சி மறவர் பகைவரையும் அவர்தம் ஊரையும் அழித்தல்.

**7.ஆகோள்:** பகைவரின் ஊரில் இருந்த ஆநிரைகளைக் கைப்பற்றி வருதல். **(எ–டு)**

கொடுவரி கூடிக் குழூ(உ)க்கொண்(டு) அனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும் – நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை. (பு.வெ.மாலை. வெட்சி. 9)

**8. பூசல் மாற்று:** ஆநிரையை மீட்க வந்த பகைவராகிய கரந்தை மறவரை முற்றிலுமாகப் போரிட்டு அழித்து மீண்டு வருதல்.

**9. நோயின்று உய்த்தல்:** கவர்ந்து கொண்ட ஆநிரைகளைத் துன்பமுறாத வகையில் ஓட்டி வருதல்.

**10. நுவல்வழித் தோற்றம்:** தம்மை எண்ணிக் கவலை கொண்டு பேசிய உறவினர்முன் அக்கவலை நீங்க வெட்சி மறவர் தோன்றுதல். **(எ–டு)**

நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்
புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று
நிறையொடு வரூஉம் என்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே (புறநானூறு.262)

**11. தந்துநிறை:** ஆநிரைகளை ஊரின் பொதுவிடத்தில் கொண்டுவந்து நிறுத்துதல்.

**12. பாதீடு:** தத்தம் தகுதிக்கு ஏற்ப வெட்சி மறவர் கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதல். **(எ–டு)**

ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்(று)ஆய்ந்(து) உரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் – விள்வாரை
மாறுஅட்ட வென்றி மறவர்தம் சீறூரில்
கூறுஇட்டார் கொண்ட நிரை. (பு.வெ.மாலை. வெட்சி. 12)

**13. உண்டாட்டு:** ஆநிரையைப் பகுத்துக் கொண்ட மறவர் தம்வெற்றியை எண்ணிக் கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதல்.

Scanned with CamScanner